# மேதின வரலாறும்

# படிப்பினைகளும்

பீ.ஏ.காதர்



ஹட்டன் மலையக மறுமலர்ச்சி மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தின வரலாறும் படிப்பினைகளும்

பி. ஏ. காதர்

ஹட்டன் மலையக மறுமலர்ச்சி மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# May Thina Varalarum Padippinaikalum

(The History of May Day & its Lessons)

by

B. A. CADER

Copyrights Reserved.

Published by

MALAYAGA MARUMALARCHI MANTRAM,
**30, Station Road, Hatton.**

Printed at

CHITRA ACHCHAKAM,
**310, Clock Tower Road, Jaffna.**

Jacket design by: **Seran.**

First edition: **August, 1982.**

## வெளியீட்டுரை

ஹட்டன் மலையக மறுமலர்ச்சி மன்றம் நடத்திய தொழிலாளர் கல்விக் கருத்தரங்கு ஒன்றில் ''மே தின வரலாறு'' என்ற தலைப்பில் நண்பர் பி. ஏ. காதர் அவர்கள் நிகழ்த்திய உரையே இங்கு நூல் வடிவில் வெளிவருகிறது.

மலையகத்தோட்டத்தொழிலாளர் மத்தியில் அவர்களது சமூக மேம்பாடு குறித்துச்செயற்படும் எமது மன்றம் தொழிலாளர் வர்க்கம் தமது உரிமைக்காகப்போராடிய வீரவரலாற்றைக்கூறும் இந்நூலை அச்சேற்றி வெளியிட்டு வைப்பதில் பெருமையடைகின்றது.

தனித்து நின்று செய்யப்படும் எந்தவொரு போராட்டமும் வெல்வதோ, அன்றி ஒரு வர்க்கத்தின் விடுதலையை மற்றொருவர் பெற்றுத்தருவரென்பதோ, கடந்த காலங்களில் சாத்தியப்படவுமில்லை. இனியும் சாத்தியப்படக்கூடியதுமில்லை. தொழிலாளர்கள் தமது பிரச்சனைகளை முன்வைத்து, வர்க்கரீதியாக ஒன்றுபட வேண்டியது அவசியம். அங்கே, இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகட்கு இடமிருக்கக்கூடாது.

மே தினம் ஆண்டுதோறும், அவ்வக்காலங்களில் ஆட்சிக்கு வரும் கட்சிகளாலும், அவைகளைச் சார்ந்து நிற்கும் தொழிற்சங்கங்களாலும், பிற அமைப்புக்களாலும் கொண்டாடப்பட்டாலும் கூட, அத்தினத்தின் உண்மையான தாத்பரியமோ அல்லது அந்த வீர வரலாற்றில் பங்குகொண்ட தொழிலாளர்களது வர்க்க உணர்வினையோ வெளிக்காட்டுவதாக அமைந்திருக்கவில்லை, என்பதனையும் இதன் கடைசிப்பாகங்களில், ஓரளவு கூறியுள்ளமை, தொழிலாளர்கள் மேதின வரலாற்றினைப் புரிந்துகொண்டு அத்தினத்தை வென்றெடுத்த வீர நாயகர்கள் வழியிலே தம்மையும் ஈடுபடுத்திக்கொண்டு தொழிலாள வர்க்க விடுதலையில் தமது பங்களிப்பை நல்க வழிவகுக்கும் என நம்புகிறேன்.

மலையக மறுமலர்ச்சி மன்றம்,
30, புகையிரத நிலைய வீதி,
அட்டன்.

அ. தி. அல்போன்ஸஸ்
இயக்குனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

'மே தினம்' என்ற தலைப்பிலே ஹட்டன் மலையக மறுமலர்ச்சி மன்றம் 06-06-82 ல் தலவாக்கெலையில் ஒரு கருத்தரங்கை நடாத்தியது. அக்கருத்தரங்கிலே "மே தின வரலாறும் - படிப்பினைகளும்" என்ற தலைப்பில் நான் ஒரு சொற்பொழிவாற்றினேன். சபையில் இருந்த தொழிலாளர் ஒருவர் அந்த சொற்பொழிவை ஏதாவதொரு எழுத்து வடிவில் தந்தால் தொழிலாளர்கள் பயனடைவார்கள் என்ற ஆலோசனையை வேண்டுகோளாக முன்வைத்தார்.

அங்கு வீற்றிருந்த மன்றத்தின் இயக்குனர் திரு. A.T. அல்போன்ஸஸ் அவர்கள் உடனே எழுந்து "சொற்பொழிவை எழுத்து வடிவிலே தந்தால் எனது மன்றம் பிரசுரித்து வெளியிடும்" என உறுதியளித்தார். நான் அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு எழுதித்தருவதாக வாக்களித்தேன்.

அவரும் நானும் வழங்கிய உறுதி மொழியின் நிறைவே இவ்வெளியீடு.

ஏற்கனவே அந்த சொற்பொழிவுக்காக தொகுக்கப்பட்ட அதே குறிப்புகளை வைத்துக்கொண்டு கட்டுரை வடிவிலே எழுதும்போது "இலங்கையில் மே தினம்" என்ற சிறு அத்தியாயத்தைத்தவிர வேறு எதையும் நான் புதிதாகச் சேர்க்கவில்லை.

இந்த கட்டுரை பல நூல்களில் இருந்து தொகுக்கப்பட்டது. அவற்றில் குறிப்பாக அலெக்சாண்டர் ட்ராச்டென்பெர்க் எழுதிய "மே தின வரலாறு" என்ற நூலைக் குறிப்பிடத்தான் வேண்டும். அந்த நூலில் அடங்காத பல விடயங்களை இத்தொகுப்பில் சேர்த்திருக்கிறேன். அதற்கான பெருமை கூட கார்ல் மார்க்ஸ், பிரடெறிக் ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோரையே சாரும்.

அவர்களது படைப்புகளில் இருந்தும் வேறு பல நூல்களில் இருந்தும் முறையாகத் தொகுப்பதற்காக மேற்கொண்ட சிரமமும் முயற்சியும் மாத்திரமே என்னுடையது. அதைத்தவிர "மே தினத்தின் படிப்பினைகள்" "இலங்கையில் மே தினம்" ஆகிய இரு அத்தியாயங்களும் என்னால் எழுதப்பட்டவை - அவ்வளவுதான்.

இந்நூலை வெளியிடுவதற்கு மூலகாரணமாய் இருந்த சித்திரா அச்சகத் தொழிலாள அன்பர்களுக்கும்...

பிரசுரித்து வெளியிட முன்வந்த திரு. A. T. அல்போன்ஸஸ் அவர்களுக்கும், அவர் சார்ந்த ஹட்டன் மறுமலர்ச்சி மன்றத்திற்கும்...

பல வழிகளில் உற்சாகமூட்டிய நண்பர்கள் S. சுப்பிரமணியம், J. பிரான்சிஸ் அவர்களுக்கும்...

பிரதியை அழகுபட எழுதி உதவிய செல்வி F. S. பரீதா, பல்வேறு உதவிகள் நல்கிய குகமூர்த்தி...

இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய யாழ் பல்கலைக்கழகப் பொருளியல் விரிவுரையாளர் நண்பர் மு. நித்தியானந்தனுக்கும், என் இதயம் கனிந்த நன்றிகள்.

B. A. காதர்

23-07-1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மலையக மறுமலர்ச்சி மன்றம் வெளியிடும் நண்பர் பி. ஏ. காதர் அவர்களின் ''மே தின வரலாறும் படிப்பினைகளும்'' என்னும் இந்நூல் காலத்தின் தேவையை நிறைவு செய்கிறது என்பதில் ஐயமில்லை.

மலையக வெகுஜன இயக்கத்தைச் சேர்ந்த ஆற்றல் மிக்க இளைஞரான பி. ஏ. காதர் எளிமையான தமிழில் சாதாரண தொழிலாளர்களும் வாசித்துப் பயன்பெறும் வகையில் இந்நூலை ஆக்கியிருப்பது குறிப்பிடத் தக்கது.

''மலையகத்தமிழரின் எதிர்காலம்'' (1981) என்ற பிரசுரத்தின் மூலம் ஆய்வறிவாளர்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்ட காதர் சிந்தனையில் தெளிவும் எழுத்தில் எளிமையும் கைவரப்பெற்றவர். மலையக மக்களின் பிரச்சினைகளுடன் இவர் கொண்டுள்ள ஆழ்ந்த ஈடுபாடும் நடைமுறை அனுபவமும் இவரின் எழுத்துக்கு வளம் சேர்க்கின்றன.

தொழிலாளர்கள் அரசியல் போதனை பெறுவதற்கு இவை போன்ற நூல்கள் நூற்றுக்கணக்கில் வெளியாக வேண்டும். மே தின வரலாற்றைக் கூறும் நூல்கள் பல வெளிவந்துள்ளனவாயினும் மலையக மக்களின் நிலைப்பாட்டிலிருந்து அதனை நோக்கும் வகையில் இந்த நூல் தனித்துவம் பெறுகிறது.

மு. நித்தியானந்தன்

பொருளியல் துறை,
யாழ் பல்கலைக்கழகம்.
01-08-82

# மே தின வரலாறும் படிப்பினைகளும்

மேதினம் இன்று பலராலும் பலவிதமாக வெவ்வேறு நோக்குடன் கொண்டாடப்படுகிறது. ஏன் அரசாங்கம் கூட காலிமுகத்திடலிலே வெளிநாடுகளிலிருந்து பிரசித்தி பெற்ற நடிக நடிகைகளையும், பாடகர்களையும் இறக்குமதி செய்து களியாட்ட விழாக்களுடன் மேதினத்தை ஆரவாரத்தோடு கொண்டாடுகிறது. மொத்தத்தில் இன்று மேதினத்தின் உட்பொருளும், வர்க்கத் தன்மையும் மழுங்கடிக்கப்பட்டு ஒரு தீபாவளி பண்டிகையைப் போலவோ அல்லது உல்லாசப் பொழுது போக்கும் ஒரு ஓய்வு தினமாகவோ மாற்றப்பட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், மேதினம் என்பது ஒரு பண்டிகை அல்ல. களியாட்ட விழா அல்ல. தொழிலாளர்கள் ஓய்வு கொள்ளும் விடுமுறை தினமுமல்ல. மாறாக, உலகெங்குமுள்ள வீரத்தொழிலாளர்கள் சகல வேறுபாடுகளையும் ஒதுக்கிவிட்டு வர்க்க அடிப்படையில் ஒன்றுபட்டு ஒரே குரலில் தமது லட்சியத்தைப் பிரகடனப் படுத்தும் நாள். சுரண்டும் வர்க்கத்திற்கெதிராக சுரண்டப்படும் வர்க்கம் கடந்த காலங்களில் தானாற்றிய வீரப் போராட்டங்களை நினைவு படுத்தி எதிர்கால போராட்டங்களுக்கு விண்ணை அதிர வைக்கும் வீர சபதம் செய்யும் நாள். ஆளும் வர்க்கத்தின் மீது தனக்குள்ள கடனை கணக்குத் தீர்ப்பதற்கு உலக தொழிலாள வர்க்கம் தனது ஒற்றுமையை ஒத்திகை பார்க்கும் ஒப்பற்ற திருநாள்.

இந்த மகத்தான நாளில் உலகெங்குமுள்ள தொழிலாள வர்க்கம் குறைவான வேலை நேரத்திற்காகத் தான் பல பத்தாண்டுகள் ஏன் நூற்றாண்டுகளாய் நடாத்திய போராட்டங்களையும், ஆற்றிய தியாகங்களையும், சிந்திய ரத்தத்தையும் நினைவு கூருகிறது. கடந்த கால படிப்பினைகளிலிருந்து எதிர்கால திட்டங்களைச் சரிபார்த்துக் கொள்கிறது. தனதும் உலக மக்களினதும் விடுதலைக்குப் பாதை சமைக்கிறது.

ஆம், மேதினம் ஒரு தற்செயலான சம்பவத்தால் பிறந்ததல்ல. ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தொழிலாளர்கள் தமது வேலை நேரத்தை வரையறுப்பதற்காக நடாத்திய இடைவிடாத போராட்டத்தின் உச்சக்கட்டமே மேதினம், அந்த வரலாற்றை அப்படியே முழுமையாக வடித்தால் அதுவே ஒரு வீர காவியம் ஆகிவிடும்.

## (1) அன்றைய தொழிலாளரின் அவல நிலை

கைத்தொழில் புரட்சி என்றும் மூலதனத்துவப் புரட்சி என்றும் வெவ்வேறு பெயர்களால் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடும் அந்த பூதாகர மாற்றம் ஐரோப்பாவிலே நடந்தேறியது ஒரு முன்னேற்றகரமான திருப்பந்தான். ஆம்! உலகின் முகத்தையே அது அடியோடு மாற்றிவிட்டது.

அதுவரை மனிதன் கண்டிராத இராட்சத தொழிற்சாலைகள் புகைகக்கிய வண்ணம் கம்பீரமாக எழுந்தன. அந்த தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களையும், அவை உற்பத்தி செய்யும் பொருட்களையும் சுமந்து கொண்டு நீரைக் கிழித்தபடி விரையும் நீராவிக் கப்பல்களும், பூமி நடுங்கி புகை தள்ளியபடி நீண்டு ஊரும் புகையிரதங்களும் ஒரு புது யுகம் தொடங்கி விட்டதை பெருமையோடு உலகுக்குப் பறைசாற்றின. ஒரு தலைமுறையால் உற்பத்தி செய்ய முடியாத அளவை ஒரு இயந்திரம் ஒரே நாளில் உற்பத்தி செய்து குவிக்கும் அதிசயத்தை மூலதனத்துவம் சாதித்தது.

மறுபுறத்தில் இதே மூலதனத்துவம் (முதலாளித்துவம்) [1] முதலாளி தொழிலாளி எனும் இரு எதிரெதிர் வர்க்கங்களையும் தோற்றுவித்தது. என்னதான் இயந்திரங்களை முதலாளி கொண்டிருந்தாலும் எவ்வளவுதான் மூலதனத்தை அவன் வைத்திருந்தாலும் தொழிலாளர்கள் இன்றி அவனால் ஒரு ஊசியைத்தானும் உற்பத்தி செய்ய முடியாது. தொழிலாளர்களைச் சுரண்டாமல் ஒரு தம்படியைத்தானும் லாபமாக அவனால் பெறமுடியாது.

உலக வரலாற்றில் முதற்தடவையாக தொழிலாள வர்க்கத்தை மூலதனத்துவம் உருவாக்கியபோது தொழிலாளர்கள் இயந்திரங்களை விடவும் படுமோசமாகக் கணிக்கப்பட்டார்கள். இந்த அளவுக்குத்தான் தொழிலாளரைச் சுரண்டலாம் என்ற வரையறை இன்றி, இத்தனை மணித்தியாலங்களே வேலை வாங்க வேண்டும் என்ற எந்த சட்ட நியதியும் இன்றி, வளர்ந்தோர் மாத்திரமல்ல, பெண்களும், சிறுவர்களும் கூட ''எகிப்திய அடிமை''களைவிடக் கேவலமாகவும், மூர்க்கமாகவும் நடத்தப்பட்டார்கள். மார்க்சின் மொழியிலே கூறுவதானால் இந்த ''நாசரீகமான பயங்கரத்தை'' விளக்குவதற்காக சில தகவல்களை இங்கு பார்ப்போம்.

''உலகின் தொழிற்சாலை'' என அப்போது வர்ணிக்கப்பட்ட இங்கிலாந்திலே தொழிலாளர்களின் நிலையை விளக்க சில உதாரணங்கள் இதோ: [2]

சட்டிப்பானைக் கைத்தொழிலில் (Pottery) ஈடுபட்ட தொழிலாளரின் நிலையைப்பற்றி ஆராய்வதற்கு இங்கிலாந்து பாராளுமன்றத்தால் (1841, 1860, 1862 ஆண்டுகளில்) மேற்கொள்ளப்பட்ட மூன்று விசாரணைகளில் இருந்து திடுக்கிடும் தகவல்கள் பல வெளியாகின:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❈ வில்லியம் வூட் என்ற 7 வயதுச் சிறுவன் 15 மணித்தியாலங்கள் இடைவிடாமல் தொடர்ந்து வேலை செய்வதை அது காட்டியது.

❈ இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் 36 6% மாத்திரமே இருபது வயதுக்கு மேற்பட்ட ஆடவர். ஏனைய 63.4 வீதத்தினர் சிறுவரும் பெண்களும் இளம் வயதினருமே.

❈ இவர்களைப்பற்றி ஆராய்ந்த வைத்திய நிபுணர்கள் ஒரு தலைமுறையைவிட அடுத்த தலைமுறை குள்ளமாகவும் பலவீனமாகவும் இருப்பதைக் கண்டுபிடித்தார்கள் அது மாத்திரமல்ல அவர்களது ''உடல் வளர்ச்சியைப் போலவே உளவளர்ச்சியும் குன்றி வருகிறது; திடுக்கிடத்தக்க வகையில் ஆயுள்காலம் குறைந்து வருகிறது; மார்புக்கூடு விகாரமடைந்துள்ளது, இளமையிலே முதுமையடையும் தன்மை அதிகரிக்கிறது; இரத்தமின்மையும், இதயம் சம்பந்தமான நியூமோனியா, ஆஸ்மா போன்ற நோய்கள் இத்தொழிலுக்குரிய பொதுவான நோயாகத் திகழ்கின்றன'' ஆகிய அதிர்ச்சியூட்டும் தகவல்களை அது வெளியிட்டது.

❈ சார்ல்ஸ் பார்சன் என்ற வைத்திய நிபுணர் இந்த சட்டிப்பானைத் தொழிலாளரது அவல நிலைமையை ஆராய்ந்து சகல பாதிப்புகளுக்கும் ஒரே காரணம்: ''கூடிய நேர வேலையே'' என்று குறிப்பிடுகிறார்.

அடுத்ததாக தீப்பெட்டித் தொழிற்சாலை ............

❈ இரசாயனப் பொருட்களின் நச்சுமணம் சூழ்ந்து பரவும் இத்தொழிற்சாலைகளில் சரிபாதி தொழிலாளர் 13 வயதுக்குக் குறைந்த சிறுவரும் 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட வயதினருமாவர். இங்கு பணிபுரிந்த அரைப்பட்டினி கிடக்கும் இளம் விதவைகள் பஞ்சைகளான கல்வியறிவற்ற சிறுவர்களைப் பெற்றெடுத்து தம் எசமானருக்கு ஏவல் புரிய அனுப்பினர்.

❈ இந்த தீப்பெட்டி தொழிலாளர்கள் வாய் தாடைப் பிடிப்பு (Lock Jaw) என்ற விசித்திரமான நோயால் அவஸ்தைப் பட்டனர்.

இவர்கள் மத்தியில் (1863) ஆய்வு நடாத்திய வைட் என்பவரின் அறிக்கை இதயத்தைக் குலுக்கும் பல தகவல்களை வெளியிட்டது:-



❈ கடந்த குளிர்காலத்தின்போது வேலை செய்யும் ஒவ்வொரு 9 சிறுமிகளில் 6 பேர் கூடியநேர வேலை காரணமாக நோயால் பாதிக்கப்பட்டதால் வேலைக்குத் திரும்பவில்லை.

❈ G. எப்ஸ்டென் கூறுகிறார்: ''எனது பையன் 7 வயதாக இருக்கும்போது எனது முதுகின் மீது அவனைச் சுமந்தபடி பனி படலத்தின்மீது நடந்து செல்வேன். அவன் அங்கே தினமும் 16 மணித்தியாலங்கள் வேலை செய்வான். அவன் இயந்திரத்தின் அருகே நின்றால் அசையமுடியாது. இயந்திரம் நின்றுவிடாமலும் அதன் வேகம் குறைந்து விடாமலும் இருக்கும்பொருட்டு நான் முழந்தாள் மன்றியிட்டபடி அவனுக்கு நின்ற நிலையிலே அடிக்கடி உணவூட்டுவேன்.''!

❈ J. லைட்பூர்ன் என்ற 13 வயது சிறுவன் கூறுகிறான்: ......''கடந்த குளிர்காலத்தின்போது, அந்த கடுங்குளிரில் இரவு 9 மணிவரை நாம் வேலை செய்தோம்... எனது காலில் உறைநல் நோய் பற்றிக்கொண்டது. வலிதாங்க முடியாமல் ஒவ்வொரு நாளும் இரவில் அழுது புலம்பினேன்.''!

❈ ஸ்மித் என்ற நிர்வாக பங்குதாரரின் கூற்றுப்படி அவரது தொழிற்சாலையில் வேலை செய்யும் 152 சிறுவரும் இளையோரும், 140 வயது வந்தோரும் 10½ மணித்தியாலங்கள் சாப்பாடு எதுவுமின்றி வேலை செய்தனர்.

❈ பேக்கரி தொழிலாளரது நிலையோ விபரிக்க முடியாத துயரம். அவர்கள் தினசரி 24 மணித்தியாலத்தில் 16 முதல் 20 மணித்தியாலம் வரை இடை விடாமல் உழைந்தனர்.

❈ ஸ்கொட்லாந்து நீதி மன்றத்திலே ஜூரிகளின் முன்னால் மூன்று பேர் நிறுத்தப்பட்டார்கள். பயங்கர ரயில்வே விபத்தொன்றில் நூற்றுக் கணக்கான பிரயாணிகள் உயிர் துறந்தனர். இந்த விபத்துக்கான காரணம் அவர்களது கவலையீனமே என்பது குற்றச்சாட்டு. குற்றஞ்சாட்டப்பட்ட மூவரும் - ஒரு கார்ட், ஒரு சாரதி, ஒரு சிக்னல் இடுவோன் - ஒரே குரலில் தமது நிலையை விளக்கினர்.

அவர்கள் தொடர்ச்சியாக 14, 18 முதல் 20 மணித்தியாலங்கள் வேலை வாங்கப்பட்டார்கள். சில சமயங்களில் இடைவிடாமல் 40 அல்லது 50 மணித்தியாலங்கள் வேலை செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர். இதனால் அவர்களது கண்கள் செருகிக் கொண்டன. மூளை இயங்கமறுத்துவிட்டது. இதுவே விபத்தின் காரணம்.

❈ பிரௌட்டன் சார்ல்டன் என்ற நீதிபதி ரேந்தை வியாபாரத்தைப்பற்றி கூறுகையில் (14-1-1860)... 9, 10 வயது சிறுவர் தமது காவி படிந்த படுக்கையில் இருந்து விடிகாலை 2, 3, 4. மணிக்கெல்லாம் எழுப்பப்படுகின்றனர். இரவு 10, 11, 12 மணி வரை வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்- வெறுமனே தமது வயிற்றைக் கழுவுவதற்காக! அவர்களது தசை தளர்கிறது, உருவம் உருக்குலைகிறது. முகமோ வெளிர்கிறது...... நினைத்தும் பார்க்க முடியாத கோரம்'' என விபரிக்கிறார்.

❈ 1863 ஜூலை மாதம் லண்டன் தினசரிகள் யாவும் ''கூடிய உழைப்பால் கோரச்சாவு ''என்பது போன்ற உணர்ச்சிமயமான தலையங்கம் தீட்டி 20 வயது இளம் பெண் ஒருத்தியின் பரிதாப சாவைப் பற்றி பரபரப்பான செய்தியை வெளியிட்டிருந்தன.

அவளது பெயர் மேரி அன்னி வோக்லி. தொப்பி தயாரிப்பதில் கைதேர்ந்தவள். லண்டன் மாநகரில் மிகவும் மரியாதைக்குரிய ஆடை தயாரிக்கும் நிறுவனம் ஒன்று. அதன் சொந்தக்காரி கவர்ச்சியான பெயரையுடைய எலிஸ் என்ற சீமாட்டி. இங்குதான் மேரி வேலை செய்தாள். சீசன் தொடங்கிவிட்டால் தொடர்ச்சியாக 30 மணித்தியாலங்கள் இடைவிடாமல் வேலை செய்வாள். சக்தியை மீட்க செரி அல்லது கோப்பி வழங்கப்படும்.

அன்று வேல்ஸ் இளவரசிக்கு அழகு ஆடை தயாரிப்பதற்காக 60 பெண்களுடன் சேர்ந்து அவள் வேலை செய்தாள். 30 பெண்களுக்கு ஓர் அறை வீகிதம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த அறையிலே தேவையான அளவில் 1/3 பங்கு காற்றே வீசும். அந்த காற்றோட்ட மற்ற அறையில் தொடர்ச்சியாக 26½ மணித்தியாலங்கள் வேலை செய்ததால் அவள் திடீரென மரணமடைந்தாள்.

❈ இனி இரும்பு கொல்லரின் நிலையைப்பார்ப்போம், கொல்லரைப் போல சுகதேகியை, சுறுசுறுப்பானவர்களை, உற்சாகமானவர்களைக் காண்பதரிது என கவிஞர்கள் பலர் கவிதைகள் பாடி வைத்திருக்கிறார்கள். உண்மை தான் ஆனால்.. ... மேரிலேபொன் நகரத்து கொல்லர்களின் நிலையோ வேறு விதமாக இருந்தது இங்கு வருடம் தோறும் 1000: 31 பேர் என்ற விகிதத்தில், கூடிய நேர வேலையால், குரூரமாக செத்து மடிந்தார்கள் கொல்லர்கள்.

பிரித்தானியாவில் மாத்திரம் தான் இப்படி நிலைமை - ''நாகரிகமான பயங்கர'' மாக - இருந்ததா? இல்லை. எங்கெங்கு மூலதனத்துவம் வேரூன்றியதோ அங்கெல்லாம் நிலைமை ஒரே விதமாகத்தான் இருந்தது- உதாரணத்திற்கு அமெரிக்கா: [3]

❈ பிலடெல்பியா நகரில் (1806) வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர் தலைவர்கள் மீது சதி வழக்கு தொடரப்பட்டது. விசாரணையில் தொழிலாளர் 19 முதல் 20 மணித்தியாலங்கள் வேலை செய்விக்கப்படுவது வெளிச்சத்திற்கு வந்தது.

## (2) தொழிலாள வர்க்கம் இந்த நிலையை ஏன் சகித்துக் கொண்டிருந்தது?

மேலே விபரிக்கப்பட்ட சகிக்க வொண்ணா நிலைமை ஆங்காங்கே விதிவிலக்காக நடந்தேறிய சம்பவங்கள் அல்ல - தொழிற்சாலைகள் தோறும், தொழில் நகரங்கள் எங்கும் அதுவே நடைமுறையாக இருந்தது.

இந்த அவலத்தை தொழிலாளர்கள் ஏன் சகித்துக்கொண்டிருந்தார்கள்? முதலாவதாக, அவர்கள் அந்த வாழ்க்கையை மறுப்பேதுமின்றி ஏற்கவில்லை. அவர்கள் வேலை நேரத்தை சட்டரீதியாக வரையறை செய்யக்கோரி தொடர்ந்து போராடினார்கள். ஆனால் மனிதனோடு பிறந்தவயிறும், வயிற்றோடு சார்ந்த வாழ்வும் அவர்களை வேறு வழியின்றி அந்த இழிநிலையை ஏற்கச் செய்தன.

இழப்பதற்கு எதுவுமில்லாத அந்த பாட்டாளிகளுக்கு வயிற்றைக் கழுவுவதற்கு அந்த தொழிலைத்தவிர வேறு வழி இல்லை. ஆனால் முதலாளிகளுக்கோ ஒரு தொழிலாளி விலகினால் அவ்விடத்தை நிரப்புவதற்கு பல தொழிலாளிகளைப் பெற முடியும். ''வேலையில்லாப் பட்டாளம்'' ஒன்று எப்போதுமே மூலதனத்துவ சமுதாயத்தில் வேலைக்காக ஏங்கிக்கொண்டிருந்தது. இவர்களைக்காட்டி, தொழிலாளியை மிரட்டி, வேலை வாங்குகிறான் முதலாளி. வேலையை இழந்து பட்டினி பேயால் கொல்லப்படாமல் இருக்கும் பொருட்டு தொழிலாளி வெறுப்போடு நிலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைச் சகித்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறான். இப்படித்தான் ''வேலையை இழக்கும் ஆபத்தையும்'' ''பட்டினிச்சாவின் பயங்கர கற்பனையையும்'' காட்டி மூலதனத்துவம் தொழிலாளரை சாகும் வரை வேலை வாங்கியது. அவ்வப்போது எழுந்த எதிர்ப்புகளை ஈவிரக்கமின்றி நசுக்கி வந்தது.

''லண்டன் தொழில் மார்க்கட் எப்போதுமே பேக்கரிகளில் செத்து மடிவதற்கு தயாராகவிருந்த ஜெர்மனியர்களாலும் பிறராலும் நிரம்பி வழிந்தது'' (மார்க்ஸ்: மூலதனம் 1ம் தொகுப்பு)

இரண்டாவதாக, தொழிலாளர்களை ஒரு அணியில் திரட்டி சக்தியை ஒருமுகப்படுத்தவல்ல ஸ்தாபனம் அப்போது அவர்களிடையே தோன்றவில்லை. எனவே ஆங்காங்கே சிதறலாக, ஒன்றுடனொன்று தொடர்பற்ற முறையில் தொழிலாளர்கள் நடாத்திய போராட்டங்களை அவர்களால் எளிதாக அடக்க முடிந்தது.

மூன்றாவதாக, தொழிலாளர்களிடையே ஒற்றுமை நிலவவில்லை. அவர்கள் கறுப்பர் என்றும், வெள்ளையர் என்றும் வேற்றுமை பாராட்டினர். இங்கிலாந்துக்காரர் என்றும், அயர்லாந்துக்காரர் என்றும் குரோதம் காட்டினர். கறுப்புத் தொழிலாளரை சுரண்டுவதற்கு, தேசிய தப்பெண்ணங்களில் இருந்து விடுபடாத வெள்ளைத்தொழிலாளர், தமது வெள்ளை எசமானர்களுக்குத் தம்மையுமறியாமல் உதவியதன் மூலம் தம்மை அடிமைச் சங்கிலியால் மேலும் இறுகப் பிணைத்துக்கொண்டனர். கறுப்புத் தொழிலாளர் மீது வெள்ளைத்தொழிலாளர் பாராட்டிய இந்த குரோதம் உண்மையில் வெள்ளைத்தொழிலாளரின் விடுதலையைத் தான் தடைப்படுத்தியது.

இதனை மார்க்ஸ் தனது மூலதனத்தில் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். ''அமெரிக்க குடியரசின் ஒரு பகுதியை அடிமைத்தனம் விகாரப்படுத்திக் கொண்டிருக்கும் வரைக்கும் ஒவ்வொரு சுதந்திரமான தொழிலாள இயக்கமும் செயலிழந்துதான் போயிற்று. **கறுப்பர் என ஒரு பகுதி தொழிலாளர் முத்திரையிடப்பட்டிருக்கும் வரை வெள்ளைத்தோல் படைத்த தொழிலாளர்கள் மாத்திரம் விடுதலைபெற முடியாது''** (அழுத்தம் என்னால் இடப்பட்டது.

ஆனால் நிலைமை இப்படியே இருக்கவில்லை. தொழிலாளர்கள் அனுபவத்தால் பாடம் கற்றுக்கொண்டார்கள். அவர்கள் தமக்கென தனி ஸ்தாபனங்களை அமைத்து, தேசிய தப்பெண்



ணங்களில் இருந்து விடுபட்டு, சர்வதேசிய உணர்வுடனும், வர்க்க உணர்வுடனும் எவ்வாறு தமது போராட்டததை முன்னெடுத்துச் சென்றார்கள் என்பதையும், தொழிலாள வர்க்க ஐக்கியத்தை குலைத்து அப்போராட்டங்களை முறியடிக்க ஆளும் வர்க்கம் என்னென்ன வழிமுறைகளைக் கையாண்டது என்பதையும் அடுத்த அத்தியாயங்களில் பார்ப்போம்,

## (3) வேலை நேரத்தைக் குறைப்பதற்கான போராட்டங்கள்

''உலகின் தொழில் பட்டறை'' என அழைக்கப்பட்ட இங்கிலாந்தில் அவ்வப்போது நிறைவேற்றப்பட்ட தொழிற்சாலைச் சட்டங்களை ஆராய்ந்தால் மூலதனத்திற்கும் உழைப்புக்குமிடையே நடைபெற்ற போராட்டத்தின் மூர்க்கத்தனத்தைப் புரிந்து கொள்ளலாம்.

❖ 1802 - 1833 க்கு இடைப்பட்ட 30 வருடங்களில் தொழிலாளர்கள் நடாத்திய போராட்டத்தின் விளைவாக 5 தொழிலாளர் சட்டங்களை இங்கிலாந்து பாராளுமன்றம் நிறைவேற்றியது. ஆனால் அவை யாவும் வெறும் கண்துடைப்புகளே. அவை, வெறும் தாளில் எழுதப்பட்ட செத்த எழுத்துக்களாகவே நிகழ்ந்தன. அதனையடுத்து 1833, 1844, 1847 களில் நிறைவேற்றப்பட்ட மூன்று சட்டங்கள் முக்கியமானவை.

### (1) 1833 ஆம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டம்:-

நவீன கைத்தொழிலில் வேலைநேர நிர்ணயம் சம்பந்தமான முதலாவது சட்டம் 1833 தொழிற்சாலை சட்டத்தில் இருந்தே தொடங்குகிறது. இச்சட்டம் காலை 5-30 மணிமுதல் இரவு 8-30 மணி வரையிலான 15 மணித்தியாலத்தில் தொழிலாளர்களை வேலைக்கமர்த்த வழிவகுத்ததுடன் 13-18 வயதுக்குட்பட்டவர்களை 12 மணித்தியாலத்திற்கு மேல் வேலை வாங்குவதை தடை செய்தது. அத்துடன் 9-13 வயது சிறுவர்களின் வேலை நேரத்தை 8 மணித்தியாலங்களாக வரையறுத்தது.

இச்சட்டம் பெண்களுக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆடவருக்கும் சலுகை காட்டவில்லை. ஆயினும் கூட தொழில் அதிபர்கள் இச்சட்டத்தை எதிர்த்தனர். தொழிலாளர் காட்டிய தீரத்தால் அவ்வெதிர்ப்புகள் வெற்றி கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியை சுலபத்தில் சுரண்டுவோர் ஏற்றுக்கொள்வார்களா? எதிர்த்துப் பயனில்லை எனக் கண்டதும் வேறு வழிகளை-தந்திரத்தைக் - கையாளத்தொடங்கின.

''மாற்று முறை'' (Relay System) என்றொரு நடைமுறையைக் கண்டுபிடித்தனர். இதன்படி சிறுவர்களும் இளையோரும் அடிக்கடி வெவ்வேறு தொழிற்சாலைகளுக்கு ஒரே தினத்துள் வெவ்வேறு வேலை நேரங்களில் வேலை செய்வதற்கு மாற்றப்பட்டார்கள். அல்லது ஒரு அறையில் இருந்து வேறொரு அறைக்கு மாற்றப்பட்டார்கள். இதனால் எந்த பரிசோதகராலும் தொடர்ச்சியாக ஒரு சிறுவன் 12 மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்ததாக நிரூபிக்க முடியவில்லை. இவ்வாறு சட்டத்தின் கண்களில் மண்ணைத்தூவி 15 மணித்தியாலங்கள் வேலை வாங்குவது மீண்டும் தொடர்ந்தது.

## (2) 1844 ஆம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டம்:-

1838-ம் ஆண்டளவில் சூழ்நிலை வெகுவாக மாறிவிட்டது. சமூக சக்தியாக வளர்ச்சி பெற்ற தொழிலதிபர்கள் தமது பகைவர்களான நிலப்பிரபுக்களிடம் இருந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு தொழிலாளர்களின் ஆதரவைப் பெறுவது அவசியம் என உணர்ந்தார்கள்.[3] தமது ''சுதந்திர வர்த்தக'' கோஷத்தை வென்றெடுப்பதற்காக தம் பக்கம் தொழிலாளர்களை இழுத்துக்கொள்ளும் பொருட்டு அப்போது தொடங்கிவிட்ட உலகின் முதலாவது தொழிலாளர் கட்சியான ''சார்ட்டிஸ்ட் கட்சி'' முன்வைத்த 10 மணித்தியால வேலை நேர கோஷத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

இதன் பின்னணியில் 1844 ஜூன் 7-ம் திகதி மேலதிக தொழிற்சாலைச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி பெண் தொழிலாளர்களுக்கு சில சலுகைகள் கிடைத்தன. இரவு வேலை பெண்களுக்கு தடைசெய்யப்பட்டதுடன் அவர்களது வேலை நேரமும் 12 மணித்தியாலங்களாக வரையறுக்கப்பட்டது.

13 வயதுக்குக் கீழ்பட்ட சிறுவர்களின் வேலை 8 மணித்தியாலத்தில் இருந்து 6½ - 7 மணித்தியாலமாகக் குறைக்கப்பட்டது. ''மாற்று முறை''யைக் கட்டுப்படுத்தவும் பல சரத்துகள் சேர்க்கப்பட்டன.



## (3) 1847 தொழிற்சாலைச் சட்டம்:-

1846 - 47 காலம் இங்கிலாந்தைப் பொறுத்தளவில் யுகம் படைத்த முக்கிய ஆண்டுகள். இந்த ஆண்டுகளில் தான் பிரித்தானிய பூர்ஷ்வாக்களின் 'சுதந்திர வர்த்தக' போராட்டம் வெற்றி பெற்றது.[4] அவர்கள் நிலப்பிரபுக்களை அரசியல் ரீதியாக தோல்வியடையச் செய்து விட்டனர்.

மறுபுறத்தில் தொழிலாளர்களின் சார்ட்டிஸ்ட் இயக்கமும் 10 மணித்தியால வேலை நேரப் போராட்டமும் அப்போதுதான் உச்சக்கட்டத்தை அடைந்தது. அதுவரை சிதறிக்கிடந்த தொழிலாளர்களின் பலத்தை சார்ட்டிஸ்ட் இயக்கம் ஓரளவுக்கு ஒன்று திரட்டி அவர்களது போராட்டத்திற்கு புது உத்வேகத்தைக் கொடுத்தது.

ஆனால் எந்த தொழிலதிபர்கள் தாம் பதவிக்கு வந்தால் ''இரண்டு மடங்கு பெரிய அளவிலான பாண் தருவோம்'' ''10 மணித்தியால வேலை நேரத்தைச் சட்டமாக்குவோம்'' என தேர்தலின்போது வாக்குறுதியளித்தார்களோ பிறைட், கோப்டென் ஆகியோரைத் தலைவராகக் கொண்ட - அதே பூர்ஷ்வாக்கள் தொழிலாளரின் துணையோடு நிலப்பிரபுக்களை முறியடித்ததும் வாக்குறுதி தவறினர். தமது உண்மை சொரூபத்தை வெளிக்காட்டினர். அவர்களது வெறிகொண்ட இராணுவம் தொழிலாளர்களை வேட்டையாடியது. ஆயினும் தொழிலாளர்கள் தமது இரத்தத்தை முதலாளித்துவப் பேய்க்கு தாரை வார்த்தவாறு தொடர்ந்து போராடியதன் விளைவாக 10 மணித்தியால சட்டம் 1847 ஜூன் 8-ம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டத்தின்படி 1847 ஜூலை 1ந் திகதி முதல் ஆரம்ப நடவடிக்கையாக 13 – 18 வயதினரினரதும் பெண்களினதும் வேலை நேரம் 11 மணித்தியாலங்களாகக் குறைக்கப்படும் என்றும் 1848 மே 1ந் திகதியில் இருந்து '10 மணித்தியாலச் சட்டம்' அமுல்படுத்தப்படும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இச்சட்டமும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆடவருக்கு எந்த சலுகையும் வழங்கவில்லை.

மூலதனம் இப்போது, 1948 மே 1ந் திகதி, '10 மணித்தியாலச் சட்டம்' அமுலாவதைத் தடுக்க போர்க்கோலம் பூண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1846 - 47) அப்போது நிலவிய கடும் பஞ்சத்தால் விபரிக்கமுடியாத சோதனைக்குள்ளாயிருந்த தொழிலாளர்கள் தமது தளவாடங்களைக்கூட அப்போது விற்றனர். அல்லது ஈடுவைத்தனர். பல தொழிற்சாலைகள் மூடப்பட்டன. இந்த சூழலை தொழிலதிபர்கள் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு தொழிலாளருக்கு வழங்கிய கூலியை 10% வீதம் குறைத்தனர். '11 மணித்தியாலச் சட்டம்' அமுலானதைத் தொடர்ந்து மேலும் $8^1/_3$ % வீத சம்பளம் குறைக்கப்பட்டது. '10 மணித்தியாலச் சட்டம்' அமுலானதும் அதைப்போல இரண்டு மடங்கு (ஆக குறைந்தது) 25% சம்பளத்தைக் குறைத்தனர். இவ்வாறு தொழிலாளரின் நிலைமையை தொழிலதிபர்கள் மேலும் திட்டமிட்டே மோசமாக்கிவிட்டு "1847ம் ஆண்டு சட்டத்தினால் விளைந்ததுதான் இந்த துயரங்கள் அனைத்தும். எனவே அச்சட்டத்தை நீக்குங்கள்" என அரசாங்கத்தைக் கோரும் மகஜரைத் தயாரித்து தொழிலாளரைக் கையெழுத்திடும்படி நிர்ப்பந்தித்தனர்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட அரை டசின் மகஜர்களில் வேறு வழியின்றி தொழிலாளர்கள் கைச்சாத்திட்டனர்.

இதனால் வெற்றிக் களிப்பில் கூத்தாடிய பூர்ஷ்வாக்கள் தொழிலாளர்களின் உண்மை நிலையை உணர்த்தி மனிதாபிமானத்தோடு நேர்மையாகக் குரல் கொடுத்து வந்த பரிசோதகர்களை (Factory Inspectors) "புரட்சிவாதிகள்" என வர்ணித்து "தமது மனிதாபிமான உணர்வினால் மகிழ்ச்சியற்ற தொழிலாளரை ஈவிரக்கமின்றி பலியிடுகிறார்கள்" எனச் சாடினர்.

தொழிற்சாலைப் பரிசோதகர் லேனார்ட் ஹோர்னர் தாமே நேரடியாக தமது சகாக்களுடன் களத்தில் குதித்தார். தாம் நடத்திய ஆய்வின் அடிப்படையில் 70% வீதமான தொழிலாளர் "10 மணி வேலை நேரச் சட்டத்தை" ஆதரிப்பதாக ஆதாரபூர்வமாக நிரூபித்தார். இவ்வாறாக மூலதனத்தின் முதலாவது முற்றுகை முறியடிக்கப்பட்டது. 1848 மே 1ந் திகதி 10 மணித்தியாலச் சட்டம் அமுலாக்கப்பட்டது.

ஆனால் மிருகத்தனமாக தொழிலாளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சார்ட்டிஸ்ட் கட்சி சீர்குலைக்கப்பட்டது. அதன் தலைவர்களுக்குச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. ஆங்கில தொழிலாளர்கள் மனவீழ்ச்சியடைந்தார்கள். தமது சொந்த பலத்தின் மீதான நம்பிக்கை குறைய ஆரம்பித்தது.



போதாக்குறைக்கு பாரீஸ் நகரத்தில் ஜூன் மாதம் நடைபெற்ற கிளர்ச்சியை மிலேச்சத்தனமாக அடக்குவதில் ஐரோப்பா கண்டத்தில் உள்ள சகல நாட்டு பூர்ஷ்வாக்களும் கைகோர்த்தனர். அரசாங்கங்களும் "சொத்துரிமை, மதஉரிமை, குடும்பம், சமூகம்" ஆகிய கோஷங்களின் பின்னால் தொழிலாளர்களின் போராட்டத்தை முறியடிப்பதில் ஓரணி திரண்டனர். தொழிலாளரின் ரத்தத்தால் பூமி சிவந்தது.

தொழிலதிபர்கள் இப்போது வெளிப்படையாகவே கலகம் செய்யத் துணிந்து விட்டார்கள். பத்துமணி நேரச்சட்டத்தை மாத்திரம் அவர்கள் எதிர்க்கவில்லை. 1833 முதல் ஆங்கிலத்தொழிலாளர் போராடிப்பெற்ற சலுகைகளையும் அவர்கள் பறிமுதல் செய்தனர். சகல தொழிலாள இயக்கங்களும் "சந்தேக நபரைக் கைது செய்யும்" சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டன.

இவ்வாறு தொழிலாளருக்கு எதிராக இடைவிடாமல் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுள் ஆளும் வர்க்கம் நடாத்திய தாக்குதல் இறுதியாக வெற்றி பெற்றது. 1950 பெப் 8-ந் திகதி இங்கிலாந்தின் அதியுயர்ந்த 4 நீதிமன்றங்களில் ஒன்று 10 மணித்தியாலச் சட்டத்தை ரத்து செய்ததன் மூலம் இது சாத்தியமாகியது.

முதலாளித்துவம் வெற்றிக்குதூகலத்தோடு மேலும் மூர்க்கமாக தொழிலாளர்களைச் சுரண்டத்தொடங்கியது. "ரிலேசிஸ்டம்" (மாற்றுமுறை) மீண்டும் புத்துயிர் பெற்றது. பாலர்களும் பெண்களும் மறுபடியும் லாபப்பேய்க்கு பலியிடப்பட்டனர்.

நிலைமை இப்படியே நீடிக்கவில்லை. தொழிலாளர்களின் பொறுமை எல்லைக் கடந்தது. அவர்கள் பொங்கி எழுந்தார்கள். அதுவரை மந்தகதியில் நடைபெற்ற அவர்களது போராட்டம் புயல்வேகத்தில் புது உத்வேகம் பெற்று முன்னேறியது. ஆற்றல் மிக்க தொழிலாளரின் சீற்றம் ஆளும் வர்க்கத்தை குலை நடுங்கச் செய்தது.

தொழிற்சாலை பரிசோதகர்கள் "வர்க்கப்பகை விபரிக்க முடியாத அளவு உச்சக்கட்டத்தை அடைந்து விட்டது" என அரசாங்கத்தை அவசரமாக எச்சரிக்கை செய்தனர்.

இழப்பதற்கு எதுவுமில்லாத பாட்டாளி, உலகை வெல்வதற்குப் புறப்பட்டு விட்டான். சீற்றம்கொண்ட அவனது எழுச்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை விவேகியான ஆங்கில முதலாளி கண்டுகொண்டான். அதுவரை தொழிலாளரின் மீது தனது இராணுவத்தையும் பொலிசையும் ஏவிவிட்டு தொழிலாளர் சிந்திய ரத்தத்தால் தன் உள்ளக்கொதிப்பை ஆற்றிக்கொண்டிருந்த ஆங்கில ஆளும் வர்க்கம் ஓடோடி வந்து தொழிலாளருடன் சமரசம் செய்து கொண்டது. இதன் விளைவாக 1850 ஆகஸ்ட் 5ந் திகதி இங்கிலாந்து பாராளுமன்றம் மேலதிக தொழிற்சாலை சட்டத்தை நிறைவேற்றியது.

இதன்படி காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரையிலான இடைக்காலத்தில் 13–18 வயதினருக்கும் பெண்களுக்கும் 10½ மணித்தியால வேலைநேரம் நிர்ணயிக்கப்பட்டது. 'ரிலே சிஸ்டம்' முற்றாக ஒழிக்கப்பட்டது. பாவம் ஆடவர்கள்!

இவ்வாறு உலகத்தொழிலாளர்களுக்கு ஆதர்சமாகத் திகழ்ந்த ஆங்கிலத் தொழிலாளர் இயக்கம் பிற்காலத்தில் பின்னடைவுற்றது. ஆளும் வர்க்கத்தின் விசுவாசமான தளபதிகள் தொழிலாளரின் தலைமையைக் கைப்பற்றிக்கொண்டு ஆளும் வர்க்கத்தோடு சமரசக்கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். சீர்திருத்தவாத சகதிக்குள் தொழிலாள இயக்கத்தைத் தள்ளிவிட்டார்கள்.

அதனை அடுத்து தொழிலாள வர்க்கத்தின் போராட்ட அரங்காக அமெரிக்கா திகழ்ந்தது. அமெரிக்க தொழிலாளர்கள் நடாத்திய வீரமிக்க போராட்டத்தின் விளைவே மேதினம் தோன்றுவதற்கு நேரடிக் காரணமாக இருந்தது. இப்போது நாம் அமெரிக்காவுக்குள் நுழைவோம்.

அதற்கு முன்பதாக சில விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வோம், ஒன்று:- வேலை நேரத்தை குறைக்கும்பொட்டு தொழிலாளர்கள் நடாத்திய போராட்டம் அமெரிக்காவுக்கு மாத்திரமே தனியானதல்ல. எங்கெல்லாம் தொழிலாள வர்க்கம் இருந்ததோ அங்கெல்லாம் வேலை நேரத்தைக் குறைப்பதற்கான போராட்டம் நடைபெற்றது. உதாரணமாக தொலைதூரத்தில் உள்ள அவுஸ்திரேலியாவிலே கட்டடத்தொழிலாளர் "8 மணித்தியால வேலை, 8 மணித்தியால பொழுதுபோக்கு, 8 மணித்தியால ஓய்வு'' என்ற கோஷத்தை முன் வைத்து 1856 ல் வெற்றியும் பெற்றனர்.

ஆனால் 8 மணித்தியால இயக்கத்தில் அமெரிக்காவே முன்னணி வகித்தது. சிக்காக்கோ நகரந்தான் '8 மணித்தியால' போராட்டத்தின் குவிமையமாகத் திகழ்ந்தது.



இரண்டு:- வேலைநேரத்தை குறைப்பதற்காக தொழிலாளர் வர்க்கம் நடத்திய போராட்டத்தின் அரசியல் முக்கியத்துவம் என்ன? ஏன் அந்த போராட்டம் வருடா வருடம் நினைவு கூரப்படுகிறது?

## (4) வேலை நேரத்தை குறைப்பதன் அரசியல் முக்கியத்துவம்

1866 ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி பல்டிமோரில் கூடிய ''ஜெனரல் காங்கிரஸ் ஒப் லேபர்'' இயக்கம் ''8 மணித்தியால வேலை நேர''த்தைப் பிரகடனப்படுத்தியது. அதே வருடம் செப்டம்பர் மாதத்தில் கூடிய முதலாவது அகிலம்- ''வேர்க்கிங்மென்ஸ் எசோசியேசன்'' நிறைவேற்றிய தீர்மானம் வேலை நேரத்தை குறைப்பதன் அரசியல் முக்கியத்துவத்தை பின்வருமாறு எடுத்துரைத்தது:

''வேலை நேரம் சட்டரீதியாக நிர்ணயிக்கப்படவேண்டும் என்பது ஒரு பூர்வாங்க நிபந்தனை. இந்த நிபந்தனை இல்லாமல் தொழிலாள வர்க்கத்தின் முன்னேற்றத்திற்காகவும் விடுதலைக்காகவும் மேற்கொள்ளப்படும் சகல முயற்சிகளும் தோல்வியிலேயே முடியும்...... இந்த மகாநாடு 8 மணித்தியால வேலை என்பதை சட்டரீதியான வரையறையாகக்கொள்ள வேண்டும் என முன்மொழிகிறது.'' இவ்வாறு மார்க்ஸ்'' 8 மணித்தியால கோரிக்கையை சர்வதேசிய தொழிலாளரின் கோரிக்கையாக வளர்த்தார். அவர் தனது மூலதனம் என்ற வரலாற்றுப்புகழ்மிக்க நூலில் 'வேலை நேரம்' என்ற தனியான அத்தியாயத்தை முடிக்கும் போது முன்வைக்கும் பொருள் செறிந்த சிறப்புமிக்க வாசகம் இதுதான்:- "தொழிலாளி (தனது உழைப்பை) விற்கும் நேரம் முடிவுற்றதும் அவனது சொந்த நேரம் ஆரம்பிக்கும் ''When the time the worker sells is ended and when his own begins''

இதனை ஏங்கெல்ஸ் விளக்குகிறார்:- தொழிலாளி தனது நேரத்தையும் தனது எசமானுக்குரிய நேரத்தையும் அப்போது அறிந்து கொள்வான். அவனது விற்பனை முடிவுற்று சொந்த நேரம் தொடங்கும்போது அவனால் தனது பணிகளை முன்கூட்டியே ஒழுங்குபடுத்திக்கொள்ள முடியும். தமது நேரத்தின் சொந்தக்காரர்களாக அவர்கள் ஆகிவிட்டால் படிப்படியாக அரசியல் அதிகாரத்தை உரிமை கொள்வதற்குத் தூண்டும் மனோவலிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு ஏற்படும். தொழிலாளர்களை மாத்திரமல்ல, எசமானர்களைக்கூட இது விடுவிக்கும். கலாச்சார நடவடிக்கைகளுக்குப் போதிய அவகாசம் அவர்களுக்கும் கிடைக்கும்.

ஆம் வயிற்றைக் கழுவுவதற்காக முழுநாளும் செக்குமாடுகளைப்போல தொழிலாளர்கள் உழைத்துழைத்து பஞ்சைகளாய் ஆகிக்கொண்டிருக்கும் வரைக்கும் அவர்களது உடலும் உளமும் சோர்ந்து அறிவு மழுங்கிப்போய் வர்க்க உணர்வும் அரசியல் விடுதலைக்கான ஆர்வமும் குன்றித்தான் போகும். கலாச்சார நடவடிக்கைகளுக்கோ அரசியல் சித்தாந்த தயாரிப்புக்கோ அவகாசம் அப்போது சாத்தியமில்லை. எனவே தொழிலாள வர்க்கத்தின் விடுதலைக்கு முதற்படி எட்டு மணித்தியால வேலை நேர நிர்ணயந்தான்.

## (5) அமெரிக்காவில் மே தினம் பிறந்தது

இனி வீரகாவியம் படைத்த அமெரிக்க தொழிலாளப் போராளிகளின் சமர்க்களத்திற்குச் செல்வோம்.

❈ 1791-ல் பிலடெல்பிய தச்சுத்தொழிலாளர் முதற்தடவையாக 12 மணிநேர போராட்டத்தைத் தொடங்கினர்.

❈ 1820-30 காலகட்டத்திலேயே தொழிற்சாலைகள் நிறைந்த நகரங்களில் எல்லாம் 10 மணித்தியால வேலைக்கான போராட்டம் சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டது அமெரிக்காவிலே.

❈ உலகின் முதலாவது தொழிற்சங்கம், ஆங்கில நாடுகளில் தொழிற்சங்கங்கள் தோன்றுவதற்கு இரண்டு வருடங்கள் முன்பதாகவே, அமெரிக்காவில் தோன்றிவிட்டது.[5] 1827ல் பில்டெல்பிய 'கட்டடத் தொழிலாளர்' 10 மணித்தியால கோரிக்கையை முன்வைத்து மகத்தான போராட்டமொன்றை நடாத்தினர்கள். இந்த போராட்டத்திற்கு பில்டெல்பிய மெக்கனிக் தொழிற்சங்கம் ஆதரவு நல்கியதனால் '10 மணித்தியால' கோரிக்கை ஒரு இயக்கமாகவே மாறிவிட்டது. இதனால்,......

❈ வான் பிரன் – னின் சமஷ்டி ஆட்சி, அரசாங்க ஊழியருக்கு 10 மணித்தியால வேலைநேர உரிமைமையை வழங்கியது.



❈ அதைத்தொடர்ந்து அரசாங்க ஊழியருக்கு மாத்திரமல்ல சகல தொழிலாளரது வேலை நேரமும் 10 மணித்தியாலமாக இருத்தல்வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வளர்ந்தது. 10மணித்தியால கோரிக்கை பரவலாக வெற்றி பெற்றவுடன் 8 மணித்தியால கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆம்! 8 மணித்தியால இயக்கம் அமெரிக்காவிலே தான் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது.

❈ 1861–62 ஆண்டுகளில் நடைபெற்ற அமெரிக்க உள்நாட்டுப்போர் அதற்கு முன்பிருந்த பல தொழிற்சங்கங்களை அடியோடு அழித்தொழித்துவிட்டது. போர் முடிவுற்றதும் ஆங்காங்கே எஞ்சி சிதறிக்கிடந்த தொழிற்சங்கங்கள் ஒன்றுபடத் தொடங்கின. நாடு தழுவிய அளவிலான தொழிற்சங்க சம்மேளனத்தின் தேவை நன்கு உணரப்பட்டது.

❈ 1866 ஆகஸ்ட் 20ந் திகதி பால்டிமோரில் அறுபது தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஒன்று கூடி ''தேசிய தொழிலாளர் ஒன்றியம்'' National Labour Union அமைப்பை உருவாக்கினர். அமெரிக்க தொழிலாளரின் பலத்தை ஒருமுகப்படுத்தக்கூடிய இத்தகைய ஸ்தாபனம் ஒன்று அமைந்தது இமாலய முன்னேற்றமாகும். இதற்கு பிரதான காரணமாயிருந்தவர் வில்லியம் சில்விஸ் என்ற இளைஞராவர்.[6]

இந்த தேசிய தொழிலாளர் ஒன்றியம் நிறுவப்பட்ட மாநாட்டில் ''8 மணித்தியால'' கோரிக்கை முன்வைக்கப்பட்டதுடன் அதற்கென பிரத்தியேகமான வேலைத்திட்டம் ஒன்று அவசியமெனவும் தீர்மானிக்கப்பட்டது.[7]

❈ போர்க்குணம் மிகுந்த அமெரிக்க தொழிலாள வர்க்கத்தை தயார் படுத்தக்கூடிய நிலைமை அற்புதமாகத் திகழ்ந்த போதும் சீர்திருத்தவாத தலைவர்களும் முதலாளித்துவ அரசியல்வாதிகளும் தொழிற்சங்கங்களில் புகுந்துகொண்டு தொழிலாளர்களுக்கு தவறான வழியைக் காட்டினர்.

நான்கு தலைமுறைக்குப்பின்னர் சில்விசின் தலைமையில் தேசிய தொழிலாளர் ஒன்றியம் தெளிவாக தொழிலாளர் நலனை முன்வைத்துப் போராடியது. இதன் செயல் வேகத்தால் நாடெங்கும் 8 மணி நேர கோரிக்கைக்கான ''தொழிலாளர் நலச்சங்கங்கள்'' அமைக்கப்பட்டன. எட்டு மணித்தியால போராட்டம் எட்டுக்கால் பாய்ச்சலில் முன்னேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❉ தே. தொ. ஒன்றியம் நடத்திய போராட்டத்தின் விளைவாக 6 மாநில அரசுகள் அரசாங்க ஊழியருக்கு ''8 மணித்தியால'' கோரிக்கையை வழங்கி சட்டங்கள் இயற்றின.

❉ ஆனால் 1867ல் அமெரிக்க பிரதம நீதிமன்றம் ''கூடிய நேரம் வேலைசெய்ய விரும்பும் தொழிலாளருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் உரிமையை'' முதலாளிகளுக்கு வழங்கியதன் மூலம் இச்சட்டத்தை உயிரற்றதாக்கியது.

❉ ஆயினும் அமெரிக்க தொழிலாளர் முன்வைத்த காலைப் பின்வைக்கவில்லை. உறுதியோடும் ஐக்கியத்தோடும் அவர்களது போராட்டம் தொடர்ந்தது. உலகை நடுங்க வைக்கும் தொழிலாளரின் சீற்றத்தினால் அச்சம் கொண்ட அமெரிக்க நாடாளுமன்றம் 1868-ம் ஆண்டு அரச ஊழியருக்கான ''8 மணித்தியால சட்டத்தை'' அவசர அவசரமாக நிறைவேற்றியது. இப்போராட்டத்தின் உந்து சக்தியாக தலைவர் மெஷினிஸ்ட் ஐரா ஸ்வேர்டு திகழ்ந்தார்,

ஆனால்... அப்போதைய ஜனாதிபதி செஸ்டர் - ஏ ஆர்தர் ''8 மணித்தியால சட்டம் அரசியல் யாப்புக்கு முற்றிலும் முரணானது. உலகிலுள்ள எந்த ஒரு சக்தியும் அதனை அமுல்படுத்தும்படி என்னை நிர்ப்பந்திக்க முடியாது'' என திமிர்த்தனமாகக்கூறி பாராளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை அலட்சியமாக நிராகரித்தான்.

ஆர்த்தெழுந்த தொழிலாளரின் ஆத்திரத்தைத் தூண்டும் வகையில் இராணுவம் கட்டவிழ்த்து விடப்பட்டது. தொழிலாளரின் ரத்தம் ஆறாகப் பெருகியது. அஞ்சா செஞ்சுறுதியோடு அரசை எதிர்த்துப் போராடிய போராளிகள் அமரத்துவம் அடைந்தார்கள். தொழிலாளருக்கு தமது நிலை இப்போது தெளிவாகத் தெரிந்தது. சட்டம் .. நீதிமன்றம்... பொலிஸ்... இராணுவம்... ஜனாதிபதி... இவை அனைத்தும் யாருக்கு சேவை செய்கின்றன என்பதையும் தம்மைப்பாதுகாக்க தமது ஐக்கியத்தையும் ஸ்தாபனத்தையும் தவிர வேறெதுவும் கிடையாது என்பதையும் புரிந்து கொண்டார்கள்.

❉ இந்த இக்கட்டான சமயத்தில் சில்விஸ் காலமானார். இவரது மரணம் தேசிய தொழிலாளர் ஒன்றியத்தில் சந்தர்ப்பவாதம் புகுந்து சீர்குலைவதற்குக் காரணமாகியது.[3] அதன் பின்னர் தளபதியற்ற சேனைபோல மந்தகதியில் அமெரிக்க தொழிலாளரின் போராட்டங்கள் சுமார் 15 வருடங்கள் தொடர்ந்தன.

❉ 1884 ஆண்டளவில் மீண்டும் தொழிலாள இயக்கம் சூடு பிடித்தது. அதே ஆண்டு அக்டோபர் 7ந் திகதி அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பின்[9] 4 வது மாநாடு சிகாகோ நகரில் கூடியது. 1866 மே 1ந் திகதி முதல் அமெரிக்காவிலும் கனடாவிலும் '8 மணி நேரத்தை' சட்டரீதியானதாகக்கருதிச் செயல்படுவது'' என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றியது.

ஆம், இனி ''கேட்டுப் பயனில்லை; கெஞ்சினால் மிஞ்சுகின்ற ஆளும் வர்க்கம் தாமாக '8 மணித்தியால' கோரிக்கையை விட்டுக்கொடுக்காது. பறித்து எடுக்க வேண்டியதுதான்! வேறு வழியில்லை!'' என்ற முடிவுக்கு அமெரிக்க தொழிலாள வர்க்கம் வந்துவிட்டது. ''அரசாங்கம் ஏற்றுக்கொண்டாலும் சரி ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி, தொழிலதிபர்கள் தந்தாலும்சரி தராவிட்டாலும் சரி, ஜனாதிபதி அங்கீகரித்தாலும் சரி அங்கீகரிக்காவிட்டாலும் சரி, எந்த பக்கத்தில் இருந்து எத்தகைய எதிர்ப்பு வந்தாலும், பலவந்தமாக '8 மணித்தியால' கோரிக்கையை அமுல்படுத்தியே தீருவது'' என திடசங்கற்பம் பூண்டது. அந்த துணிச்சலான தீர்மானத்தை அமுல்படுத்தும் தினமாக மே 1ந் திகதி தெரிவு செய்யப்பட்டது.

❉ 1885ல் மீண்டும் ஒரு முறை மாநாடு கூடி 1886 மே 1ம் திகதி திட்டமிட்டபடி தொழிலாளர் வெளிநடப்பு செய்வது என்ற தீர்மானத்தை உறுதிப்படுத்தியது. நாடு பரந்த அளவில் போராட்டத்திற்கு தயாரிப்பு செய்யப்பட்டது. தச்சுத்தொழிலாளரும், சுருட்டுத் தொழிலாளரும், போராட்டத்திலும் தயாரிப்பு வேலையிலும் முன்னணி வகித்தனர்.

1886 மே 1 ந் திகதி நெருங்க நெருங்க நிலைமை விறுவிறுப்பும் சுறுசுறுப்பும் அடைந்தது. 8 மணி கோரிக்கைக்காக பல குழுக்களும் சங்கங்களும் பலபகுதிகளில் தோன்றின. மே 1ந் திகதி 8 மணித்தியால கோரிக்கைக்காகப் போராடுவது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் வியக்கத்தக்க விதத்தில் தொழிற்சங்க அங்கத்துவம் அதிகரித்தது.

அரசியல் தெளிவு இல்லாவிட்டாலும் போராடும் இயக்கமாக அப்போது திகழ்ந்த இடதுசாரி தொழிலாளர் இயக்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைய களமாக சிக்காகோ மாறியது. அமெரிக்காவின் முதலாவது தொழிலாளர் கட்சியான சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சி 8 மணித்தியால போராட்டத்தை ஆதரித்தது.

இவ்வாறு தொழிலாளர் மனத்தெம்போடும், உற்சாகத்தோடும், பெருகிவரும் ஆதரவோடும் மேதினத்தை எதிர்நோக்கினர். '8 மணித்தியால' கோரிக்கையை அங்கீகரித்த தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட சுருட்டுகளையும் சிகரட்டுகளையும் புகைத்தார்கள். 8 மணித்தியால பாதணிகளையே அணிந்தார்கள்.

❉ மே தினம் நெருங்க நெருங்க அமெரிக்காவின் மிகப் பெரிய தொழிற்சங்கமான ''தீரமிக்க தொழிலாளர் சங்கத்தின் (Knights of Labour) தலைமை குறிப்பாக 'டெரன்ஸ் புவடார்லி' தனது சமரசக்கொள்கையின் அப்பட்டமான சந்தர்ப்பவாதத் தன்மையை வெளிப்படுத்தினன். இந்த தொழிற்சங்கம் போராட்டக்குணமுள்ளது என பரவலாக நம்பப்பட்டது. அதன் அங்கத்துவம் '8 மணித்தியால' கோரிக்கைக்குப்பின்னர் 20 ஆயிரத்திலிருந்து 70 ஆயிரமாக 1886 ல் அதிகரித்தது.

ஆனல் டெரன்ஸ் புவடார்லி மே தின வேலை நிறுத்த இயக்கத்தை சீர்குலைக்க முயன்முன். இவன் தன்னுடன் இணைந்த தொழிற்சங்கங்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாம் என இரகசியமாக கேட்டுக்கொண்டான். இந்த சீர்குலைவு வேலை வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்ததும் அத்தொழிற்சங்கத்தின் செல்வாக்கு வெகுவாகக்குறைய ஆரம்பித்தது. தலைமையை மீறிக்கொண்டு தொழிற்சங்க ஊழியர்களும், தொழிலாளர்களும் தொழிற்சங்க சம்மேளனத்திற்கு ஆதரவு நல்கினர். வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் முன்னெப்போதும் கண்டிராத அளவு வேகத்தோடு முன்னேறின.

பின்வரும் புள்ளிவிபரம் அதனை தெளிவாக உணர்த்துகிறது.

| ஆண்டு | இடம்பெற்ற வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் | பாதிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | பங்குகொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1881-1884 வரை | 500 | ? | 150,000 |
| 1885 | 700 | 2467 | 250,000 |
| 1886 | 1572 | 11562 | 600,000 |



❉ தொழிலாளர்கள் மே தினத்தை நோக்கி தயாராகிக் கொண்டிருக்கும்போது மறுபுறத்தில் தொழிலாளருக்கு எதிராக முதலாளிகள் தயாராகிக்கொண்டிருந்தார்கள். சிக்காகோ முதலாளிகள் ஒன்றுகூடி ''பிரஜைகள் கமிட்டி'' என்ற அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு தொழிலாள தலைவர்களை அழித்தொழிப்பதன் மூலம் தொழிலாள இயக்கத்தை துடைத்தெறிய முற்பட்டனர். ஆளும் வர்க்கத்தின் கையில் இருந்த பிரச்சார சாதனங்கள் யாவும் முடுக்கிவிடப்பட்டன. ''சிக்காகோ மெயில்'' என்ற முதலாளித்துவப் பத்திரிகை தொழிலாள தலைவர்களை '' கலகத்தைத் தூண்டிவிடும் பயங்கரவாதிகள்'' என வர்ணித்தது. பொலீசும் இராணுவமும் தொழிலாளரை காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கின.

❉ இருப்பினும் மே 1ந் திகதிக்கு முன்னரே 30 ஆயிரம் தொழிலாளர் '8 மணி' கோரிக்கையை வென்றெடுத்துவிட்டனர்.

❉ 1886 மே 1ந் திகதி:- முதலாளிகளும் தொழிலாளர்களும் தத்தமது நலன்களுக்கு ஏற்றவகையில் நீண்ட தயாரிப்புடன் எதிர்பார்த்த மேதினத்தின்பொழுது புலர்ந்து சிவந்தது.

தொழிலாளர்கள் போருக்குச் செல்லும் படை வீரரைப் போன்ற உறுதியுடன் தத்தமது தொழிற்சாலைக்குச் சென்றனர். வழமை போல வேலை நடந்தேறியது. சரியாக 8 மணித்தியாலம் முடிவுற்றதும் 11562 தொழிற்சாலையைச் சேர்ந்த 6 லட்சம் தொழிலாளர் தத்தமது உபகரணங்களை அப்படி அப்படியே போட்டுவிட்டு வெளிநடப்பு செய்தார்கள். இயந்திரங்களின் இரைச்சல் முற்ருக நின்றுவிட, அதற்குப் பதிலாக தொழிலாளப்போராளிகள் இசைத்த போராட்ட கீதங்களும், கோஷித்த சுலோகங்களும் விண்ணில் முட்டிமோதின. இத்தகைய ஒரு கூட்டு நடவடிக்கையை, ஒற்றுமைப்பலத்தை உலகம் முன்னர் கண்டதில்லை.

டெட்ரோயிட் நகரிலே 11 ஆயிரம் தொழிலாளர் போராட்ட கீதம் இசைத்தபடி வீர ஊர்வலம் வந்தார்கள். முதல் நாள் போர்ாட்டத்தின்போதே 1 லட்சத்து 85 ஆயிரம் தொழிலாளருக்கு வெற்றி கிடைத்துவிட்டது. இராணுவத்தின் வெறியாட்டம் ஓயவில்லை. தொழிலாளரின் துணிவை பொலிஸ் காட்டுமிராண்டித்தனம் குலைக்கவில்லை. வேலை நிறுத்தம் தொடர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❉ மே 3ந் திகதி "மெகார்மிக் ரீப்பர் வேர்க்ஸ்" என்ற தொழிற்சாலையைச் சேர்ந்த 1400 தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தபோது 300 கருங்காலிகள் பொலிசாரின் பக்கத்துணையுடன் வேலையில் ஈடுபட்டிருந்தனர். கருங்காலிகளைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி தொழிலாளப் போராளிகள் கோஷித்தபோது நிராயுதபாணியான தொழிலாளர்மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். 6 தொழிலாளர் மரணமடைந்தனர். பலர் படுகாயமுற்றனர். இந்த செயலைக் கண்டித்து மறுநாள் – மே 4 - ஹேமார்க்கட் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டப் பொதுக்கூட்டம் ஒன்று பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

❉ மே 4- ஹே மார்க்கட் சம்பவம்:- சிக்காகோ மேயர் ஹரிசன் வேறுவழியின்றி கூட்டத்திற்கு அனுமதி வழங்கியதோடு கூட்டத்திலும் கலந்துகொண்டார். அலை அலையாக தொழிலாளர் ஹேமார்க்கட் சதுக்கத்தில் அணிதிரண்டனர். துரதிஷ்டவசமாக 10 மணியளவில் தொடங்கிய கடும் மழை ஓயவில்லை. மழைக்கு மக்கள் ஒதுங்கியபோது கூட்டம் கலைந்துவிட்டதென நம்பிய மேயர் பொலிஸ் நிலையம் சென்று சட்டரீதியான ஹேமார்க்கட் கூட்டம் எவ்வித அசம்பாவிதமுமின்றி முடிவுற்றதென அறிவித்ததுடன் பொலிசாரை வழமையான கடமையில் ஈடுபடும் படியும் பணித்தார்.

இதற்கிடையில் ஹேமார்க்கட் கூட்டத்தை முடிவுக்குகொண்டுவரும் தருவாயில் சொற்பொழிவாற்றிக்கொண்டிருந்த பீல்டனுடன் காரணமில்லாமல் பொலிசார் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது......

எங்கிருந்தோ ஒரு ''வெடிகுண்டு'' பொலிசார் மீது வீசப்பட்டது. ஒரு பொலிஸ்காரன் அவ்விடத்திலே மரணமடைந்தான். பேய்க்கு குங்கிலியம் இட்ட கதைதான். பொலிசார் காட்டுமிராண்டித்தனமாக தொழிலாளரைத் தாக்கினர். இருதரப்பினருக்குமிடையே பலத்த கைகலப்பு ஏற்பட்டது. ஏழு பொலிசாரும் 4 தொழிலாளரும் மரணமடைந்தனர். 200 க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். **மே தினம் தொழிலாளரது ரத்தத்தால் சிவந்தது.**

❉ எட்டுத்தலைவர்களும்[10] 100 க்கும் அதிகமான தொழிலாளரும் கைதுசெய்யப்பட்டனர். சிக்காகோ நகரம் முழுதும் அரசால் முற்றுகையிடப்பட்டது. தொழிலாளர்களின் இல்லங்களிலிருந்து வெடிகுண்டு, துவக்கு போன்ற பயங்கர ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக பொய்யான செய்திகளை முதலாளித்துவப்பத்திரிகைகள் வெளியிட்டன.



❉ கைதான எட்டு தொழிலாள தலைவர்மீதும் வழக்குத் தொடரப்பட்டது. விசாரணையின்போது இவர்கள் மீதான எந்த குற்றச்சாட்டையும் நிரூபிக்க முடியவில்லை. அரசாங்க வழக்குரைஞன் வெளிப்படையாகவே நீதிபதியிடம் கேட்டுக்கொண்டான். ''சட்டத்திற்கு சவால் விடப்பட்டுள்ளது. இவர்களைப் பின்பற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களோடு ஒப்பிடும்போது இவர்கள் பாரதூரமான குற்றம் எதுவும் புரியவில்லைதான். இவர்கள் செய்த ஒரே குற்றம்... தொழிலாள தலைவர்களாய் இவர்கள் இருப்பதுவே பிரபு! தொழிலாளருக்கு ஒரு எச்சரிக்கையாய் இருக்கும்பொருட்டு இவர்களை எப்படியேனும் குற்றவாளி ஆக்குங்கள்! கடுமையான தண்டனை வழங்குங்கள்! நீதியையும் அமைதியையும் நிலைநாட்டுங்கள்.

❉ வழக்கை விசாரணை செய்த கெரி என்ற நீதிபதி ஒஸ்காருக்கு 15 வருட ஆயுள் தண்டனையும் ஏனைய 7 தலைவர்களுக்கு மரண தண்டனையும் வழங்கும்படி தீர்ப்பளித்தான்.

❉ தொழிலாளர்கள் பொங்கி எழுந்தார்கள். தமது தலைவர்களை விடுதலை செய்யும்படி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். தொழிலாளர்களின் ஆத்திரத்தை தணிப்பதற்காக, அவர்களது குரலுக்கு மதிப்பளிப்பதைப்போல அரசாங்கம் நடந்துகொண்டது. பீல்டன், யூஜின் சுவாப் ஆகிய இருவரது மரணதண்டனையும் ஆயுள்தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

❉ ஆனால் 1887 நவ 11ந் திகதி பாசன்ஸ், ஸ்பைஸ், ஏங்கெல், பிஷர் ஆகிய நால்வரும் தூக்கிலிடப்பட்டனர். சில்லிங் ஏற்கனவே கொல்லப்பட்டுவிட்டான். உயிரோடு இருந்த வரைக்கும் தொழிலாளர் உரிமைக்காகப் போராடிய இந்த வீரத்தலைவர்கள் நீதி மன்றத்திலும் தூக்கு மேடையிலும்கூட தமது லட்சியத்திற்காக தீரத்தோடு போராடினார்கள். அவர்கள் தூக்கு மேடையிலும் நீதிமன்றத்திலும் நிகழ்த்திய பேச்சுக்கள் வீரம் செறிந்தவை, அமரத்துவம் பொருந்தியவை.

எட்டு மணித்தியால போராட்டத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்ட வீரத்தியாகி பார்சன்ஸ் 8 மணித்தியாலம் தொடர்ந்து உரையாற்றினார். அவ்வுரையில்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தொழிலாளர்களாகிய நாம் அடிமைச்சங்கிலியை உடைத்தெறிவோம், சுதந்திரம் பெறுவோம். வறுமையையும் அச்சத்தையும், துடைத்தெறிவோம்... சோஷலிசம் என்பது தனிப்பட்டவர்களை எதிர்ப்பதல்ல. ஒரு சில கோடீஸ்வரர்களையும் மிகப்பல வறியவர்களையும் உருவாக்குகின்ற இந்த அமைப்பை அழிப்பதாகும்'' என முழங்கினர்.

ஸ்பைஸ்:- ''இந்த நீதிமன்றத்தில் ஒரு வர்க்கத்தின் பிரதிநிதியாக நின்றுகொண்டு இன்னொரு வர்க்கத்தின் பிரதிநிதிகளின் முன்னால் பேசுகிறேன். உங்கள் குற்றச்சாட்டே என்னை நிரபராதியாக்குகிறது. என்மீது சுமத்தப்பட்டுள்ள அபாண்டமான பழிகள்... அதுதான் உங்கள் வரலாறு. அலட்சியத்தோடும் பெருமையோடும் என் உயிரைத்தரத் தயார்... எங்கே உங்கள் கொலையாளிகள்?'' என நீதிமன்றத்தில் முழங்கினர். தூக்குமேடையிலே அவர் ''இன்று நீங்கள் அழித்தொழிக்க முயலும் இந்த ஓசைகளைவிட நாளை ஏற்படப்போகும் மௌனம் சக்தி வாய்ந்தது... ...விடுதலையை நாடுகின்ற, துயர்தோய்ந்த, வறுமைச்சுமை மிகுந்த லட்சோப லட்சம் அடிமட்ட ஏழைகளின் தொழிலாள இயக்கத்தை, எம்மைத் தூக்கிவிடுவதன் மூலம், தடுத்து நிறுத்திவிடலாம் என நீங்கள் கருதினல் எம்மைத்தூக்கிலிடுங்கள். அதன் மூலம் உங்கள் முகத்திற்கு முன்னாலும் முதுகுக்குப்பின்னாலும், அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி, புகைமுட்டி, தீச்சுவாலை கக்கும் பெருந்தீயை மிதித்தவராவீர்கள். தரையின் அடியிலே தணலாய் கொதிக்கும் அந்த பூதாகர நெருப்பை உங்களால் அணைத்துவிட முடியாது!'' என கர்ஜித்தார்.[11]

✣ தூக்குமேடையிலே அவர்கள் காட்டிய தீரம் தொழிலாளர்களைத் தட்டி எழுப்பியது. எஞ்சியோரை விடுதலை செய்வதற்கான இயக்கம் தொடர்ந்தது.

✣ இறுதியாக தொழிலாளரின் ஆத்திரத்தை தணிப்பதற்காகவும் உலக அபிப்பிராயத்தில் இருந்து தப்பித்துக்கொள்ளவும் முழுப்பழியும் கெரி நீதிபதி மீதும் ஜூரிகள் மீதும் போடப்பட்டது. 1893 ஜூன் 29ல் ஓல்ட் கெல்ட் என்ற தேசாதிபதி ''...அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிருபணமாகவில்லை. அவர்கள் நிரபாதிகள், ஜூரிகளினதும் நீதிபதியினதும் பாரபட்சமான தீர்ப்பினல் அநீதி இழைக்கப்பட்டுவிட்டது'' எனக்கூறி எஞ்சிய மூன்று தலைவர்களையும் விடுதலை செய்தான்.



ஹேமார்க்கெட் கூட்டத்தில் வைத்து பொலிசார்மீது ''வெடிகுண்டெறி'ந்தவன் முதலாளிகளின் கையாள் என்பது பின்னர் அம்பலமானது. அவனைக் கைதுசெய்த பொலிசார் வழக்கு எதுவுமின்றி விடுதலை செய்தனர்.

## (6) மே தினம் சர்வதேச தொழிலாளர் தினமாதல்

1885–1886 ஆண்டுகளில் வேலை நிறுத்த இயக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பை ஈடுசெய்ய விரும்பிய முதலாளிகளுக்கு தொழிலாளரின் பிரேதங்கள்மீது நின்றுகொண்டு வெற்றிக்களிப்பால் கூத்தாடிய சிக்காகோ முதலாளித்துவ வர்க்கம் பச்சைக்கொடி காட்டியது. ''தொலைந்தார்கள் தொழிலாள தலைவர்கள். அழிந்தது தொழிலாளர் போராட்டம்'' என தப்புக்கணக்குப்போட்டார்கள். அவர்களது மகிழ்ச்சி நீடிக்கவில்லை. ஸ்பைஸ் கூறிய அந்த தரையின் அடியில் தணலாய் கொதித்த அந்த நெருப்பு கிளர்ந்து எரிந்தது.

தூக்கிலிடப்பட்ட தலைவர்களின் சாவு தொழிலாளரை அச்சம்கொள்ளச் செய்யவில்லை. ஆத்திரம்கொள்ளச் செய்தது. இரத்தத்திற்கு ரத்தம், பழிக்குப்பழி என அவர்கள் வெஞ்சினத்தால் துடித்தார்கள்.

✣ 1888 டிசெம்பர் மாதம் தொழிலாள தலைவர்கள் தூக்கிலிடப்பட்ட மறு ஆண்டு செயின்ட் லூயி நகரில் கூடிய தொழிற்சங்க சம்மேளனம் ''அமெரிக்க தொழிலாளர் சம்மேளனம்'' என்ற பெயரில் புனருத்தனம் செய்யப்பட்டது. தூக்கிலிடப்பட்ட தலைவர்களின் பெயரால் ஆணையிட்டு 1890 மே 1ந் திகதி 8 மணித்தியால போராட்டத்தை மீண்டும் தொடங்குவது என சபதம் எடுத்தது. தீர்மானம் நிறைவேற்றியது. மே தினத்தின் தியாகம் செறிந்த வர்க்கப்போராட்ட நினைவுகள் தொழிலாளரின் நரம்புகளில் வீரரத்தத்தைப் பாய்ச்சும் வலிமை பெற்று விட்டதால் அந்த மே தினம் போராட்டத்திற்குரிய நாளாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

✣ 1889 ஜூலை 16ந் திகதி ''பாஸ்டில் சிறை''[12] வீழ்த்தப்பட்ட வீரநிகழ்ச்சியின் நூற்றாண்டைக் கொண்டாடுமுகமாக பாரிஸ் நகரில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சோஷலிசத் தலைவர்கள் ஏங்கெல்ஸ் தலைமையில் ஒன்றுகூடி உலகத்தொழிலாளருக்கென ஒரு சர்வதேச அமைப்பை - இரண்டாவது அகிலத்தை உருவாக்கினர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் கலந்துகொண்ட அமெரிக்க பிரதிநிதிகள் அமெரிக்க தொழிலாளர் 8 மணித்தியால போராட்டத்தில் காட்டிய திரம், 8 மணித்தியால இயக்கம் தற்போது அடைந்துள்ள புதுவேகம், ஆகிய விபரங்களை விரிவாக எடுத்துரைத்தார்கள்.

❈ அம் மாநாடு அமெரிக்க தொழிலாளர் 8 மணித்தியாலப் போராட்டத்தை தொடரவிருக்கும் 1890- மே 1 ந் திகதியை சர்வ தேச தொழிலாளர் தினமாகப் பிரகடனப்படுத்தியது. அத்தினத் தில் உலகெங்குமுள்ள தொழிலாளர்கள் '8 மணித்தியால போராட் டத்தைஒருமித்து நடாத்தவேண்டுமென தீர்மானித்தது.[13]

❈ 1890- மே 1 முதலாவது சர்வதேச தொழிலாளர் தினம். அமெரிக்காவிலே அரசியல் அடிப்படையில் தொழிலாளர்க ளின் இயக்கத்தை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் வாய்ந்த இயக்க மாக மே தினம் மாறி ஒரு பாரம்பரியமே உருவாகிவிட்டது. அந்த வீரபாரம்பரியம் முதற்தடவையாக உலகெங்கும் 1890 மே 1 ந் திகதி விஸ்தரிக்கப்பட்டது. திட்டமிட்டபடி சர்வதேச தொழிலாளர் தினம் சர்வதேச பிற்போக்கு சக்திகளின் கூட்டுச் சதியையும் மீறி வெற்றி பெற்றது.

❈ அமெரிக்காவிலே பீட்டர் மெகைரே தலைமையின் கீழ் தச்சுத்தொழிலாளர் சங்கமும் கட்டட தொழிலாளர் சங்கமும் மே தினத்தில் முன்னணி வகித்தன. சிக்காகோவிலும் நியூயார்க் கிலும் மே தினம் பிரமாண்டமான வெற்றிகளையீட்டியது. பல் லாயிரக்கணக்கானோர் உணர்ச்சி ததும்ப ஊர்வலம் சென்று பொதுக்கூட்டத்துடன் மே தின நிகழ்ச்சியை முடிக்கும் புரட்சி கர மரபை இந்த நகரங்களே முதலில் வெற்றிகரமாகச் செயல் படுத்தின.

❈ ஜெர்மனியிலே... சோஷலிஸ்டுகளுக்கு எதிராகப் பல தனிப்பட்ட சட்டங்கள் அமுலில் இருந்தன. ஆயினும் தொழில் நகரங்களிலெல்லாம் மேதினம் கொண்டாடப்பட்டது.

❈ முதற்தடவையாக உலகத்தொழிலாளர்கள் ஒரே கோஷத் தின் கீழ் ஒரே தினத்தில் ஓரணியில் திரண்டனர்.[14]

## (7) மேதினத்திற்கான போராட்டம்

அடுத்த வருடம் (1891) பிரஸ்ஸல்சில் கூடிய இரண்டாம் அகிலத்தின் மாநாடு மே 1 ந் திகதியை '8 மணித்தியால' கோரிக் கைக்கான சர்வதேச தினம் என்ற தனது நிலைப்பாட்டினை மீண் டும் வலியுறுத்தியபோது சந்தர்ப்பவாத தலைவர்கள் தமது சம ரசக் கொள்கையை அப்பட்டமாக வெளிக்காட்டினர்.

பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சந்தர்ப்பவாத தலை வர்கள் மேதின 'ஆர்ப்பாட்டத்தை மே மாதத்தில் வரும் முதலா வது ஞாயிற்றுக்கிழமை வைத்துக்கொள்ளலாம் என்று பிரேரித்த ஜேர்மன் சோஷல் டெமாக்கிரட்டுகளுடன் சேர்ந்துகொண்டு ஆதரிக்களித்தனர்.

மே தினத்தில் வருடா வருடம் பங்குகொள்ளும் தொழிலா ளரின் எண்ணிக்கை கூடிக்கொண்டே சென்றது. உலகெங்கு முள்ள ஆளும் வர்க்கம் அதனை தமக்கொரு அச்சுறுத்தல் எச்ச ரிக்கை என்ற நோக்கில் பார்க்கத் தொடங்கின.

1893 ஜுரிச் நகரில் ஏங்கெல்ஸ் தலைமையில் கூடிய அகில உலக மாநாட்டில் மேதினத்தின் நோக்கம் மேலும் விஸ்தரிக்கப் பட்டது. மே தினம் வர்க்க பேதத்தை ஒழிக்க தொழிலாள வர்க்கம் உறுதி பூண்டிருப்பதைக் காட்டும் தினமாக அமைய வேண்டும் என அது வலியுறுத்தியது.[15]

ஆனால் சீர்திருத்தவாத தலைவர்களோ மேதினத்தின் ஜீவத் துடிப்பையும் போர்க்குணத்தையும் மழுங்கடிக்கும் விதத்தில் மே மாதத்தின் முதலாவது ஞாயிற்றுக்கிழமையில் மே தினத்தை நடத்தும்படி வலியுறுத்தினார்கள். ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளாக இருப்பதால் வேலை நிறுத்தம் செய்யவேண்டிய அவசியமில்லை. அதே சமயம் மேதினத்திற்காக வேலை செய்யவில்லை எனக் காட் டிக்கொள்ளவும் முடியும் அல்லவா? இதுதான் இவர்களது தந் திரம்!

இவர்களைப் பொறுத்தளவில் மே தினம் என்பது ஒரு சர்வ தேச விடுமுறை தினம். ஊருக்கு வெளியே பூங்காக்களில் கொண்டாட்டங்களும் விளையாட்டுகளும் நடக்கும் நாள்.

இவ்வாறு மே தினத்தை உயிரற்ற பிணமாக ஆக்குவதற்கு சந்தர்ப்பவாத தலைவர்களும் ஆளும் வர்க்கமும் கூட்டாக மேற் கொண்ட பல்வேறு முயற்சிகளில் சிலவற்றை இனி பார்ப்போம்.

❈ அமெரிக்காவிலே 1886-ம் ஆண்டுக்கு பின்னர் உள்ளூர் மட்டங்களில் பரவலாக செப்டம்பர் மாதத்தில் வரும் முதலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது திங்கட்கிழமை தொழிலாளர் தினமாக கொண்டாடப்பட்டது. பின்னர் மேதின கொண்டாட்டத்தை முறியடிப்பதற்காக பல மாநில அரசுகள் செப்டம்பர் முதலாவது திங்கட்கிழமையை தொழிலாளர் தினமாக அங்கீகரித்தன.

அமெரிக்க தொழிலர்ளர் சம்மேளனத்தின் சந்தர்ப்பவாத தலைவர்களின் துணையோடு 1928ம் ஆண்டளவில் ஹூவர் தலைமையிலான ஆட்சி மே தினத்தின் உட்பொருளை அழிப்பதற்காக மே 1ந் திகதியை ''குழந்தைகள் சுகாதார தினம்'' என பிரகடனப்படுத்தியது.

❉ முதலாவது உலகப்போர் தொடங்கியபோது ஏகாதிபத்தியங்களுக்கு சார்பாக சந்தர்ப்பவாத தலைவர்கள் நடந்துகொண்டார்கள். ஜெர்மனியிலே அவர்கள் மே 1ந் திகதி தொழிலாளரை ''தாய் நாட்டின் பெயரால்'' வேலை செய்யுமாறு வேண்டிக்கொண்டார்கள்.

❉ பிரான்சிலே ஆட்சியாளர்கள் தொழிலாளர்பற்றி அஞ்ச வேண்டியதில்லை என மேதினத்தில் அறிக்கை விடுத்தனர்.

உண்மையான தொழிலாளவர்க்க தலைவர்கள் சந்தர்ப்பவாத தலைவர்களுக்கு மாறாக மேதினத்தின் பாரம்பரியத்தைப் பாதுகாத்து போற்றி வளர்த்தனர்.

❉ முதலாவது உலக மகாயுத்தத்தின்போது ''நாட்டுப் பற்று'' என்ற விஷக்காற்றை பரப்பி தமது கொள்ளைக்கார யுத்தத்தில் மக்களைப் பலிகொடுக்க ஏகாதிபத்தியங்கள் முயன்றபோது லெனின், லீப்ஹ்னெக், ரோசா லுக்சம்பர்க்[16] போன்றோர் ''ஏகாதிபத்திய போரை உள்நாட்டுப்போராக மாற்றவேண்டும்'' என்ற கோஷத்தை மேதின பிரகடனமாக முன்வைத்து சர்வதேசிய உணர்வில் தொழிலாளரைப் பயிற்றுவித்தனர்.

❉ 1916-ம் ஆண்டு மேதினத்தில் பொலீஸ் தடை உத்தரவையும்மீறி ஜெர்மனிய தொழிலாளரை கார்ல் லீப்ஹ்னெக் மேற்கூறிய லட்சியத்திற்காக வழிநடாத்திச் சென்ருர்.

❉ அமெரிக்காவிலே 1917 போர் பிரகடனம் செய்யப்பட்டபோதும் சார்ல்ஸ் இ. ருத்தன்பர்க்[17] தலைமையில் மேதினத்தை யுத்த எதிர்ப்பு தினமாக பிரகடனப்படுத்தி 20 ஆயிரத்திற்கும்



அதிகமான தொழிலாளர்கள் வீதிகளில் அணிவகுத்துச் சென்ருர்கள். கூட்டத்தின்மீது பொலிசார் மூர்க்கமான தாக்குதலைத் தொடுத்தனர். ஒருவர் கொல்லப்பட்டார்.

❉ இரண்டாவது உலக மகா யுத்தம் தொடங்கியபோது தொழிலாளர்கள் பாசிச இராணுவத்தை அழிப்பதற்காகப் போர்க் கருவிகளை உற்பத்தி செய்து மே தினத்தைக் கொண்டாடினுர்கள்.

❉ மே தினத்தில் 8 மணி நேர வேலை என்ற கோரிக்கையோடு சிறு கோரிக்கைகளையும், வெறும் பொருளாதாரக்கோரிக்கைகளையும் சேர்த்துக்கொண்டதற்காக லெனின் காசர்கோவ் தலைவர்களை விமர்சித்தார். மே தினத்தின் புனிதமான அரசியல் தன்மை பிற கார்மேகங்களால் சூழப்படக்கூடாது என அவர் கருதினுர்.[18]

❉ ஏகாதிபத்திய யுகம், தேசிய விடுதலை இயக்கங்களைத் தட்டி எழுப்பியபோது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தினமாகவும் மே தினம் வளர்ச்சியுற்றது.

## (8) இலங்கையிலே மே தினம்

இலங்கையில் மே தினத்தை முறியடிப்பதற்கு பல்வேறு முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டது. ஒரு தடவை மே தின ஊர்வலத்தை அரசாங்கம் தடை செய்தபோது இலங்கை தொழிலாள வர்க்கம் தடை உத்தரவையும் மீறி ஊர்வலம் சென்றது. பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒரு தொழிலாளி மரணமடைந்தார். இவ்வாறு இரத்தம் சிந்தித்தான் மே தினத்தைக் கொண்டும் உரிமையை இலங்கைத்தொழிலாள வர்க்கம் பெற்றது.

துப்பாக்கி முனையில் மே தினத்தைத் தடுத்துவிட முடியாது எனக்கண்ட இலங்கையின் ஆளும் வர்க்கம் வேறு வழியை நாடத் தொடங்கியது. எந்த ஆளும் வர்க்கம் மே தினம் கொண்டாடியதற்காக தொழிலாளரைச் சுட்டுக்கொன்றதோ அதே ஆளும் வர்க்கம் இப்போதுதானே முன்னின்று மே தினத்தை விமர்சையாகக் கொண்டாடத் தொடங்கிவிட்டது. ஆனுல்... எப்படி? எதற்காக?

யூ. என். பி. அரசாங்கம் காலிமுகத்திடலிலே வெளிநாட்டிலிருந்து நடிகர்களையும், பாடகர்களையும் இறக்குமதி செய்து கேளிக்கை நடாத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டரசாங்கமோ அப்பாவி தோட்ட தொழிலாளர்களை அரசாங்க பஸ்களில் இலவசமாக ஏற்றிக்கொண்டுபோய் சோறு கொடுத்து புரியாத பாஷையிலே ''இலவச அரிசி வேண்டாம், சீனி வேண்டாம்'' என எழுதப்பட்ட மக்கள் விரோத சுலோக அட்டைகளைக் கையில் கொடுத்து ஊர்வலமாக அழைத்துச்சென்று ''பொப் இசைக்கச்சேரி'' நடாத்தியபோது, எமது சந்தர்ப்பவாதத்தலைவர்கள் மந்திரி பதவியிலே ஒட்டிக்கொண்டு ''மசால் வடை'' சுலோகங்களை எழுப்பி தாளம் போட்டுக்கொண்டிருந்தனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணியோ, தமிழ் மக்களின் விடுதலைக்கு எதிராக அரசாங்கத்துடன் திரைமறைவில் திருட்டுத்தனமாக கூட்டு சேர்ந்திருப்பதை நியாயப்படுத்தும் நாளாக மே தினத்தைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறது.

இன்று அரசாங்கத்தோடு ஒட்டிக்கொண்டிருக்கும் ''தொழிற்சங்க தலைவர்களுக்கோ'' மேதினத்தைப்பற்றி நினைத்துப்பார்க்கவும் நேரமில்லை.

இந்த ஆளும் வர்க்கமும் அதன் கைப்பொம்மைகளும் எதற்காக மே தினத்தைக் கொண்டாடுகிறார்கள்? தொழிலாளர்களைத் தட்டியெழுப்பி அவர்களுக்குள்ள கடமையை உணர்த்துவதற்காகவா? இல்லை. அவர்களது போராட்ட உணர்வை மழுங்கடிப்பதற்காக. மே தினத்தின் விரிந்த தத்துவத்தைக் குறுக்கி குற்றுயிராக்குவதற்காக, அவர்களது கடமையிலிருந்து கவனத்தைத் திசைதிருப்புவதற்காக.

அவர்கள் பொப் இசைக்கச்சேரிகளையும் நடிகர்களின் கூத்தையும் மேடையேற்றுவது உழைத்துழைத்து சோர்ந்துபோயிருக்கும் பாட்டாளிகளுக்கு புத்துணர்ச்சி அளிப்பதற்காகவா? இல்லை. அவர்கள் அரசியல் விழிப்பு பெற்றால் புத்துணர்ச்சி பெற்று புது தெம்புடன் கிளர்ந்தெழுவார்களே அதைத் தடுப்பதற்காகத்தான்.

உண்மையிலே... இந்த பிணந்தின்னிக்கழுகுகளுக்கு மேதினம் கொண்டாட எவ்வித உரிமையுமில்லை. மேதினம் அவர்களுக்கு எதிரான தினம். மேதினத்தின் சொந்தக்காரர்கள் சுரண்டப்படுவோர், ஒடுக்கப்படுவோர் மாத்திரமே. ஆனால்... தொழிலாளர்களின் சக்தியை ஒன்று திரட்டி ஆளும் வர்க்கத்துடனான மோதலுக்கு ஒத்திகை பார்க்கும் மே தினம் இலங்கையில் இன்று



அடுத்த பாராளுமன்ற தேர்தலில் எந்த ஆளும்வர்க்கக்கட்சிக்கு அதிக பலம் கிடைக்குமென்பதை ஆய்வு நடத்தும் ஒரு தினமாக மாற்றப் பட்டுவிட்டது.

மே தினத்தில், தொழிலாளவர்க்கத்தின் ஒருமைப் பாட்டைக் கண்டு தனக்கு விடப்படும் எச்சரிக்கையாக அதனைக் கருதி அஞ்சி நடுங்கிய இலங்கையின் ஆளும் வர்க்கம் இப்போது தொழிலாளர்கள் பல்வேறு தொழிற்சங்கங்களாய், கட்சிகளாய் பிரிந்து இனக்குரோதத்துடன் ஒருவரோடொருவர் அவநம்பிக்கையோடும் பகைமையோடும் தனித்தனியான மே தினத்தைக் கொண்டாடுகின்ற அழகைப் பார்த்து தனது பிரித்தாளும் தந்திரம் வெற்றி பெற்றுவிட்டது என்ற குதூகலத்தோடு புன்னகை பூக்கிறது. இனிபயமில்லை என்ற மன ஆறுதலுடன் கேளிக்கையை ரசிக்கிறது - தனியாக அல்ல. ஒரு பகுதி தொழிலாளரையும் சேர்த்துக் கொண்டு தான்.

## (9) மே தினத்தின் படிப்பினைகள்

மே தினத்தின் நீண்ட வரலாறு உழைக்கும் மக்களுக்கு பயனுள்ள பல படிப்பினைகளை வழங்குகிறது. அவற்றை இங்கு ஓரளவாவது மேலோட்டமாகவேனும் குறித்துக் கொள்வோம்.

**(1) 'எட்டு மணித்தியால' வேலை நேரம் எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது?** ஆளும் வர்க்கம் தொழிலாளர் படுகின்ற துயரத்தையும் அவலத்தையும் பார்த்து மனம் உருகிப் போய் சலுகை காட்டியதா? அல்லது வானத்தில் இருந்து அது அருள் மழையாகப் பொழியப்பட்டதா?

இல்லை ..... தொழிலாளர்களின் சொந்த முயற்சியாலும் அளப்பரிய தியாகம் செறிந்த வீரத்தோடு ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நடாத்திய இடைவிடாத போராட்டத்தின் பயனாகவும் தான் அது வென்றெடுக்கப்பட்டது.

தொழிலாளரின் உரிமைகள் தயவால் கிடைப்பவை அல்ல. தியாகம் செறிந்த வீரத்துடன் கூடிய ஈவிரக்கமற்ற போராட்டத்தில் வென்றெடுக்கப்படுபவை.

(2) உரிமைகள் போராடிப் பெறுபவை என்றால் எவ்வாறு? தன்னலங் கருதாத, வீரமும் தியாகமும் செறிந்த, லட்சியத்திற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை அர்ப்பணித்த, நல்லெண்ணமும் உணர்வும் உள்ள தனி நபர்களும், ஒரு சில கோஷ்டிகளும் ஆயுதம் ஏந்தி போராடுவதன் மூலம் மாத்திரம் உரிமைகள் கிடைத்து விடுமா? பரந்துபட்ட மக்களின் உத்வேகம் பெற்ற இயக்கமாக மாறுத வரைக்கும் நியாயமான போராட்டங்கள் கூட வெற்றி பெறுவதில்லை.

ஒன்றுடொன்று தொடர்பற்ற, தன்னெழுச்சியாக ஆங்காங்கே தொழிலாளர்கள் நடாத்திய வேலை நேரக் குறைப்புக்கான போராட்டத்தைக்கூட ஆளும் வர்க்கம் எளிதில் அடக்கி விடவில்லையா?

எவ்வாறு அவர்களது போராட்டம் வெற்றி பெற்றது?

முதலாவதாக, தொழிலாள வர்க்கம் தன்னை ஒரு தூய சக்தியாக, சந்தர்ப்பவாத தலைவர்கள் நோய்க் கிருமிகளாகத் தோற்றிய போதெல்லாம் அவர்களை நிராகரித்து ஒதுக்கி விட்டு, தன்னை முதலில் ஸ்தாபனப் படுத்திக் கொண்டது.

இரண்டாவதாக, தனது '8 மணித்தியால வேலை'' என்ற லட்சியத்தை தெளிவாக வரையறுத்துக் கொண்டு அதற்கு பரந்தளவில் மக்களை பங்கெடுக்க வைத்தது. பெருமளவில் ஆதரவு திரட்டியது. சகல தொழிற்சங்கங்களையும், அரசாங்க ஊழியர்களையும் அணி திரட்டியது. சாத்தியமான சகல கட்சிகளினதும் ஆதரவைப் பெற்றது.

மூன்றுவதாக, சர்வதேச தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்று தனது பலத்தையும் மன உற்சாகத்தையும் வளர்த்துக் கொண்டு போராடியதன் விளைவாகத்தான் வெற்றி கிடைத்தது. எனவே எந்த ஒரு போராட்டத்தின் வெற்றிக்கும் மூன்று முன் நிபந்தனைகள் உண்டு.

ஒன்று, ஸ்தாபனம். இரண்டு, சரியான லட்சியமும் அதனை அடைவதற்கான சரியான மார்க்கமும் பரந்துபட்ட மக்களின் உணர்வு பூர்வமான பங்கெடுப்பும். மூன்று, சர்வதேச தொழிலாளரின் ஒத்துழைப்பு.

**(3) மக்கள் போராட்டங்களை ஆளும் வர்க்கம் எவ்வாறு முகங் கொடுக்கிறது?**

மக்கள் போராட்டங்களை ஆளும் வர்க்கம் கைகட்டி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதில்லை.



I அது மக்கள் ஸ்தாபனங்களையும் ஐக்கியத்தையும் சீர்குலைக்க பல்வேறு வழிகளைக் கையாள்கிறது.

அ) அது மக்கள் தலைவர்களை லஞ்சம் கொடுத்தும் பதவிகள், பட்டங்கள் வழங்கியும் தனக்கு விசுவாசமாக சேவகம் செய்யும் ஊழியர்களாக மாற்றிக் கொள்கிறது. இந்த சந்தர்ப்பவாதத் தலைவர்கள் ஆளும் வர்க்கத்தோடு ஒத்துப்போகும் சமரசக் கொள்கையால் தொழிலாளரின் போர்க்குணத்தை மழுங்கடித்து ஆளும் வர்க்கத்திற்கு உதவுகிறுர்கள். இவர்கள் தொழிலாள இயக்கத்தில் ஊடுருவிய முதலாளித்துவத்தின் காவலர்கள்.

டெரன்ஸ் புவுடர்லி 1886 மே 1ந் திகதி வேலை நிறுத்தம் செய்ய வேண்டாம் என தொழிலாளரைக் கோரவில்லையா? சில்விஸின் மரணத்தின் பின் சீர்திருத்தவாத தலைவர்கள் ''தேசிய தொழிற் சங்க சம்மேளனத்தை'' சீர்குலைக்க வில்லையா?

(ஆ) அது மத, மொழி, இன நிற, தேசிய வேறுபாடுகளைப் பயன் படுத்தி மக்களைக் கூறு போடுகிறது. பிரித்தாள்வது என்ற தந்திரம் ஆட்சியாளருக்கு அத்தியாவசியமான கலை. இந்த கலையில் தேர்ச்சி பெறுமல் துப்பாக்கியின் துணையோடு நீண்ட காலம் அதனுல் ஆள முடியாது கறுப்புத் தொழிலாளருக்கெதிராக வெள்ளைத் தொழிலாளரையும், ஐரிஷ் தொழிலாளருக்கெதிராக இங்கிலாந்து தொழிலாளரையும் தூண்டி விட்டு பல தடவைகள் 'வேலை நேர குறைப்புக்கான' போராட்டத்தைப் பின் தள்ளியதை வரலாறு அறியும்.

(இ) உண்மையான மக்கள் தலைவர்கள் மீது அபாண்ட பழிகளைச் சுமத்தி சிறைக்கும் தூக்கு மேடைக்கும் அனுப்புகிறது.

II மக்கள் போராட்டம் ஓங்கி வரும் போது.

(அ) ஜனநாயகத்தின் முகமூடி கிழிக்கப்பட்டு உண்மை சொரூபம் வெளிப்படுகிறது.

முதலாளித்துவ அரசியல் இயந்திரமும், நிர்வாகமும், வணிகமும் செயற்படுவதற்கு ஓரளவுக்கு ஜனநாயகம் தேவை. இந்த ஜனநாயகம் பற்றி பெரிதாக பாராளுமன்றங்களில் உரத்தக் குரலில் பேசப் படுகிறது. பேச்சு சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், சட்டத்தின் முன்னல் அனைவரும் சமம் என்றெல்லாம் அழகுபட வர்ணிக்கப் படுகிறது. ஆனுல் மக்கள் நியாயமான அடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படை உரிமைகள் மறுக்கப்பட்டு வேறு வழியின்றி சட்டரீதியாக போராடத் தொடங்கும் போது கூட இந்த போலி ஜனநாயகம் பறிக்கப் பட்டு விடுகிறது.

மக்களின் பத்திரிகைகள் தடை செய்யப் படுகின்றன. ஊர் வலமும் பொதுக் கூட்டமும் சட்ட விரோதமாக்கப் படுகின்றன. பொய்யான வழக்குகள் சோடிக்கப்பட்டு முதலாளித்துவ நீதிமன் றம் மக்கள் தலைவர்களைத் தண்டிக்கிறது.

பயங்கர ஆயுதங்கள் கண்டு பிடிக்கப் பட்டதாக சிக்காகோ பத்திரிகைகள் பொய்யான தகவல்களை வெளியிடவில்லையா? தனது கையாளைக் கொண்டு வெடிகுண்டு எறிந்து, கலகத்தை தோற்றுவித்து, பழியைத் தலைவர்கள் மீது போட்டு, தூக்கு மேடைக்கு அனுப்பவில்லையா?

எனவே முதலாளித்துவ ஜனநாயகம் என்பது முதலாளித்துவ சர்வாதிகாரமே தவிர வேறில்லை. பத்திரிகை, வானொலி, பிரச் சார சாதனங்கள் எல்லாம் அந்த சர்வாதிகாரத்திற்கு துணை நிற் கும் கருவிகள்.

(ஆ) மிருகத்தனமாக பலாத்காரத்தால் மக்களின் போராட் டத்தை நசுக்க முயல்கிறது.

பொலிஸ், இராணுவ முப்படைகளும் ஆளும் வர்க்கத்தின் நலனைப் பாதுகாக்கும் பலாத்கார யந்திரங்களே. நியாய அநியா யங்களை கணக்கில் எடுத்து ஆராயாமல் அவை ஆளும் வர்க்கத் தின் கட்டளையை நிறை வேற்றுகின்றன. வேலை நிறுத்தம் ஒன்று நடைபெறுகிறது என வைத்துக் கொள்வோம். பொலிசும், முப் படையும் யாரை அப்போது பாதுகாக்க முன் வருகிறது? முத லாளியையா, தொழிலாளியையா? நிச்சயமாக முதலாளியைத் தான். அவை மக்களின் கருவிகள் அல்ல, முதலாளிகளின் கைக் கருவிகள் என்பதை விளக்க இந்த உதாரணமே போதும்.

இந்த ''அரசுயந்திரம்'' 8 மணித்தியால போராட்டத்தின் போது புரிந்த அட்டூழியங்களை மீண்டும் இங்கு விபரிக்க தேவை யில்லை.

(இ) கருங்காலிகளின் உதவியுடன் போராட்டத்தை முறியடிக்க முனைகிறது.



(ஈ) பலாத்காரத்தால் மக்களின் போராட்டத்தை முறியடிக்க முடியாத சமயங்களில்-

❖ அது உடனே தன்னைப் பாதிக்காத முறையில் சமரசம் செய்து கொள்கிறது. 10 மணித்தியால போராட்டம் உச்சக் கட் டத்தை அடைந்த போது சகல முறியடிப்பு முயற்சிகளும் தோற்கவே பிரித்தானிய ஆளும் வர்க்கம் சமரசம் செய்து கொண் டதை இங்கு நினைவு கூறலாம்.

❖ அது வழங்கும் ஒவ்வொரு சலுகையையும் முறியடிக்க வெவ்வேறு மாற்று வழிகளையும் கூடவே கண்டு பிடித்துக் கொள் கிறது.

சிறுவர்களின் வேலை நேரம் வரையறுக்கப்பட்டபோது ''ரிலே சிஸ்டம்'' ''8 மணித்தியால'' கோரிக்கையை முறியடிக்க ''கூடிய நேரம் வேலை செய்ய விரும்பும் தொழிலாளரோடு ஒப்பந்தம் செய்து கொள்ளும் உரிமை''

❖ போராடுவோரில் ஒரு சாரர்ருக்கு மாத்திரம் கோரிக் கையை வழங்குவதன் மூலம் போராட்டத்தை முறியடிக்க முயல் கிறது.

12 மணித்தியால போராட்டத்தின் போதும் 10 மணித்தி யால போராட்டத்தின் போதும் தொழிற் படையின் பிரதான சக்தியான 18 வயதிற்கு மேற்பட்ட ஆடவர் தனிமை படுத்தப் பட்டனர்.

''8 மணித்தியால போராட்டத்தின்'' போது அரசாங்க ஊழியருக்கு முதலில் சலுகைக் காட்டப்பட்டது.

❖ அநீதியிழைக்கப்பட்ட மக்களின் ஆத்திரம் எல்லை மீறும் போது ''ஜனநாயகத்தின் தூய்மையைப்'' பாதுகாக்க கண் துடைப்பு நாடக மாடி மக்களைச் சாந்தப் படுத்துகிறது.

மே தினத்தியாகிகளை தூக்கு மேடைக்கு அனுப்பிய பழியை, மக்கள் வெகுண்டெழுந்த போது, கெரி என்ற நீதிபதி மீது போட்டது. ஆனல் கெரி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

(4) தொழிலாளர் வர்க்கத்தால் எப்போது பேரம் பேச முடிகிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மூலதனத்துவ அமைப்புக்குள் வென்றெடுக்கக் கூடிய உரிமைகளைக் கூட தொழிலாள வர்க்கத்தின் ஸ்தாபன பலம் குன்றி இருக்கும் போது பெற முடியாது. தொழிலாள வர்க்கம் தனது சக்தியின் அளவைப் பொறுத்துத்தான் ஆளும் வர்க்கத் தோடு பேரம் பேசுவதென்றால் கூட சாத்தியமாகும்.

சாட்டிஸ் இயக்கம் பலம் பெற்று வளர்ந்த போது தொழி லாளரால் பல சலுகைகளை வென்றெடுக்க முடிந்தது. அவ்வியக் கம் சீர்குலைந்த போது அப்போது பெற்ற சலுகைகள் மாத்திர மல்ல அதற்கு முன்னர் போராடிப் பெற்ற உரிமைகள் கூட பறித் தெடுக்கப்பட்டன.

தொழிலாள ஸ்தாபனங்கள் பலம் பெற்று திகழும் போது தான் தொழிலாளரின் வாழ்க்கை நிலைமையில் கூட முன்னேற்றம் காணப்படுகிறது.

❖ தொழிலாளர் ஸ்தாபன பலம் குன்றி இருக்கும் போது ஆளும் வர்க்கம் தொழிலாளரைக் கொண்டே தொழிலாளருக் கெதிரான நடவடிக்கைகளை மேற் கொள்ள தூண்டுகிறது.

'10 மணித்தியால சட்டத்'திற்கெதிராக தொழிலாளரைப் பட்டினிபோட்டு மகஜரில் கையெழுத்து வாங்க வில்லையா?

(5) ஆளும் வர்க்கம் தொழிலாள வர்க்கத்தின் சித்தாந்தத்தையும் போர்க் குணத்தையும் மழுங்கடிக்க சகல உத்திகளையும் கையாள் கிறது.

மே தின கொண்டாட்டத்தை தடுத்து நிறுத்த சகல பலாத் கார நடவடிக்கைகளும் பயனற்று போனதும் ''மே முதலாவது ஞாயிறு'' ''செம்டம்பர் முதலாவது திங்கள்'' ''மே 1ந் திகதி குழந்தைகள் சுகாதார தினம்'' என்றெல்லாம் பல்வேறு தந்தி ரங்களைக் கையாண்டது. அவையும் தோல்வியைத் தழுவியவுடன் தானகவே முன்னின்று மே தினத்தை நடாத்த தொடங்கி விட் டது. போராட்ட உணர்வைத் தூண்டும் தினமாக அல்ல, உல் லாசக் கேளிக்கையுடன் ஓய்வு கொள்ளும் விடுமுறை நாளாக.

(6) எந்த ஒரு வர்க்கமும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்று வதற்கு மக்களின் ஆதரவைப் பெறுவது அவசியம். எனவே மக் களைக் கவரும் கோஷங்களை அது முன் வைக்கிறது. ஆட்சிக்கு வந்தவுடன் மக்களுக்கெதிராகச் செயல் படுகிறது.



நிலப்பிரபுக்களுக்கு எதிராக ''தானிய சட்டத்தை'' நீக்கும் படி பிரைட், கொப்டன் ஆகியோரின் தலைமையிலான பூர்ஷ்வா வர்க்கம் போராடிய போது தமது தேர்தல் சுலோகங்களாக ''இரண்டு மடங்கு பாண் - 10 மணித்தியால வேலை நேரம்'' ஆகிய கோஷங்களை முன் வைக்க வில்லையா? பதவிக்கு வந்ததும் 10 மணித்தியால கோரிக்கையை முன் வைத்த தொழிலாளர்களை இராணுவத்தை ஏவி வேட்டையாடியதுடன் சார்ட்டிஸ்ட் இயக் கத் தலைவர்களை சிறையில் போட வில்லையா?

(7) என்ன தான் ஆளும் வர்க்கம் விவேகமான புதுபுது உத்தி களைக் கையாண்டாலும், தனது பலத்தையும் லட்சியத்தையும் தெளிவாகப் புரிந்து கொண்டு, தொழிலாள வர்க்கம் தன்னை ஒரு தூய அரசியல் சக்தியாக விடுவித்துக் கொண்டு, ஒன்றுபட்டு அந்த லட்சியத்தை அடைவதற்கான சரியான சித்தாந்த வழி காட்டலோடு செயற்படத் தொடங்கினால் உலகின் எந்த சக்தியும் அதன் பயணத்தை தடுத்து நிறுத்தி விட முடியாது.

தற்காலிகமாக ஆளும் வர்க்கம் வெற்றி பெறலாம். ஆனல் இறுதியில் வெற்றி பெறுவது தொழிலாள வர்க்கமே! ஏனெனில் அது தான் தியாகஞ் செறிந்த, வீரம் பொருந்திய புரட்சிகர சக்தி. இழப்பதற்கு அதனிடம் எதுவுமில்லை. அடிமைச் சங்கிலியைத் தவிர. ஆனல் அதற்கு வெல்வதற்கோ பரந்ததோர் உலகம் உண்டு. இது தான் மே தினம் உணர்த்தும் பாடம்.

இன்று மார்க்ஸ் இலங்கையில் இருந்தால் மே தின லட்சியங் களை அடைவதற்கு இலங்கை தொழிலாளருக்கு இப்படித் தான் அறிவுரை கூறுவார்:-

''சிங்களவர் அல்லாத பிற தேசிய இனங்களை ஒடுக்குவதற்கு சிங்கள பூர்ஷ் வாக்களுக்கு ஒத்துழைப்பு நல்கிக் கொண்டிருக்கும் வரைக்கும் சிங்களப்பாட்டாளி வர்க்கம் தனது விடுதலையைப் பெற முடியாது.

சிங்களப்பாட்டாளி வர்க்கத்தை வெறுத்து ஒதுக்கி வீட்டு தமிழ்ப்பாட்டாளி வர்க்கம் தனது விடுதலையை வென்றெடுக்க முடியாது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்குறிப்புகள்:**

1. மூலதனம் + தத்துவம் (Capital + ism) என்ற ஆங்கிலச் சொல்லை தமிழில் முதலாளித்துவம் (முதல்+ஆள்பவன்+தத்துவம்) என தவருக மொழி பெயர்க்கப்பட்டு ஜனரஞ்சகமாக பயன்படுத்தப்படுகிறது. இதனுல் நூறு ரூபா முதலீடு (முதல்+இடு) செய்து வெற்றிலைப் பாக்கு விற்பவன் கூட முதலாளியாகி விடுகிருன்.

முதலாளித்துவம் என்றதும் சுருட்டுக்கடை, சரக்குக்கடை, புடவைக்கடை முதலாளிகளே மனக்கண்ணில் தோன்றுகின்றனர் மூலதனத்தை ஆள்வோர் அல்ல. மக்கள் அணியைச் சேர்ந்த இவர்களை எமது பிரதான எதிரிகளிடம் இருந்து வேறுபடுத்தி பார்க்க முடியாத ஒரு மயக்கத்தை இச் சொல் ஏற்படுத்துகிறது.

எனவே ''மூலதனத்துவம்'' என்ற சரியான சொல்லை இந் நூலின் மூலம் அறிமுகப்படுத்தி முதற்தடவையாக பிரயோகிக்கிறேன்.

2. கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனத்திலே முதலாவது பாகத்தின் ''வேலை நாட்கள்'' என்ற அத்தியாயத்தில் இருந்து தரப்படுகிறது.

3. அலெக்சாண்டர் ட்ராச்டென்பெர்க் எழுதிய ''மேதின வரலாறு'' என்ற நூலில் இருந்து. (பாட்டாளி வெளியீடு, மே 1978)

3a. தானிய சட்டத்தை நீக்கும் படி பூர்ஷ்வாக்கள் நடாத்திய போராட்டம் இங்கு குறிப்பிடப்படுகிறது.

4. தானிய சட்டம் நீக்கப்பட்டது. பருத்தி மீதும் ஏனைய மூலப் பொருட்கள் மீதுமான சுங்கவரி அகற்றப்பட்டது.

5. உலகின் முதலாவது தொழிற் சங்கமான ''பிலடெல்பியா மெக்கானிக் தொழிற் சங்கம்'' இங்கு குறிப்பிடப்படுகிறது.

6. இவர் முதலாவது அகிலத்தின் தலைவர்களோடு குறிப்பாக மார்க்ஸ் ஏங்கெல்சோடு கடித தொடர்பு வைத்திருந்தார்.

7. இளைஞரான சில்விஸின் செல்வாக்கு பெரிதும் அதிகரித்தது அவரது முயற்சியாலும் அவருக்கிருந்த மரியாதை காரணமாகவும் உலக தொழிலாள வர்க்க இயக்கத்தோடு ஒத்துழைக்கும் தீர்மானமும் 1869ல் நடைபெறவிருக்கும் முதலாவது அகிலத்தின் மாநாட்டுக்கு ஒரு பிரதி நிதியை அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.



8. சில்விஸுக்குப் பதிலாக ''வேர்க்கிங் மென் அட்வகேட்'' பத்திரிகையின் ஆசிரியர் A. C. கமரான் 1669ல் நடைபெற்ற முதலாவது அகிலத்தின் மாநாட்டு பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

முதலாம் அகிலத்தின் நம்பிக்கைக்குரிய அந்த இளம் தொழிற் சங்க தலைவரின் மறைவுக்குப் பிரத்தியேகத் தீர்மானம் ஒன்றை மாநாடு நிறை வேற்றியது. ''பாட்டாளி வர்க்க இராணுவத்தின் தளபதியாக பத்தாண்டு காலம் அரும் செயலாற்றிய சில்விஸின் மீது எம் அனைவரது விழிகளும் திரும்புகின்றன. அந்தோ சில்விஸ் காலமாகி விட்டார்.''

9. ''The Federation of organised Trades & Labour Unions''

10. கைதான எட்டுத் தலைவர்களின் பெயர் பின்வருமாறு:-
i) அல்பரட் பார்சன்ஸ் ii) ஆகஸ்ட் ஸ்பைஸ் iii) பீல்டன் iv) யூஜின் சுவப் v) அடொல்ப் பிஷர் vi) ஜோர்ஜ் ஏங்கல் vii) சில்லிங் viii) ஒஸ்கார்

11. பார்க்க;- Spies August;- His Speech in Court and General Notes; 1887

12. இந்த சிறையிலே தான் பிரான்சின் அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டிருந்தார்கள்.

13. அத்தீர்மானம் பின்வருமாறு:- ''பரீஸ் மாநாட்டு முடிவுகளைச் செயல் படுத்தவும், உழைக்கும் மக்கள் ஆட்சியாளர்களை வேலை நேரத்தைச் சட்டப்படி 8 மணித்தியாலமாகக் குறைக்கும்படி கோரியும், எல்லா நாடுகளிலும், எல்லா நகரங்களிலும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் கேட்பதற்கு வசதியாக, உலகு தழுவிய ஆர்ப்பாட்டம் நடாத்த ஏற்பாடு செய்வது என இம் மாநாடு தீர்மானிக்கிறது. ஏற்கனவே இது போன்ற ஓர் ஆர்ப்பாட்டத்தை 1890 மே 1ந் திகதி நடத்துவதென அமெரிக்க தொழிலாளர் சம்மேளனம் 1888 டிசெம்பர் மாதம் செயின்ட் லூயி மாநாட்டில் முடிவெடுத்திருப்பதால் அதே 1-5-1890ந் திகதியையே உலகு தழுவிய ஆர்ப்பாட்டத்திற்கான திகதியாக இம்மாநாடு ஏற்றுக் கொள்கிறது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் ஜெர்மனிய 4வது பதிப்புக்கான முகவுரையை 1-5-1890ந் திகதி எழுதும் போது ஏங்கெல்ஸ் இதுபற்றி குறிப்பிடுகிறார்;- ''நான் இந்த வரிகளை எழுதிக் கொண்டிருக்கும் போது அமெரிக்க, ஐரோப்பிய பாட்டாளி வர்க்கம தமது பலம் குறித்து ஆய்வு நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. முதற் தடவையாக ஒரு கொடியின் கீழ் ஒரு இராணுவமாக ஒரே நோக்கத்திற்காக ஒன்றுபட்டுள்ளது. சட்டப்படி அமைந்த 8 மணி வேலை நேரம் என்பதே ஒரே ஒரு நோக்கம்...... இன்று நாம் பார்த்துக் கொண்டிருக்கும் காட்சி எல்லா நாடுகளிலும் உள்ள முதலாளிகளையும் நில உடைமையாளர்களையும், அனைத்துலக நாடுகளிலும் உள்ள பாட்டாளி வர்க்கம் உண்மையிலே ஒன்றுபட்டு இருக்கிறது என்ற உண்மையைப் புரிந்து கொள்ளச் செய்யும். அந்தோ! என்னோடு சேர்ந்து தன் இரு கண்களால் இக்காட்சியைக் காண மார்க்ஸ் உயிரோடு இல்லையே!''

(அப்போது மார்க்ஸ் அமரத்துவம் அடைந்து விட்டார்)

15. 1893 ஜூரிச் மாநாட்டுத்தீர்மானம்:– ''மே முதலாம் திகதி 8 மணித்தியால வேலைக்காக நடைபெறும் ஆர்ப்பாட்டமானது தொழிலாளர் வர்க்கத்தின் உள்ளக் கிடக்கையை உணர்த்தும் ஆர்ப்பாட்டமாகவும் அமைய வேண்டும். தொழிலாள வர்க்கத்தின் உள்ளக் கிடக்கை யாதெனில் சமூக மாற்றத்தின் வாயிலாக வர்க்க பேதத்தை ஒழிப்பதாகும். அவ்வாறு வர்க்க பேதத்தை ஒழிப்பது எல்லா மக்களின் அமைதிக்கும் சர்வதேச அமைதிக்கும் இட்டுச் செல்லும் பாதையாக இருக்கும்.''

16. லீப்ஹ்னெக், ரோசா லுக்சம்பர்க் ஆகிய இருவரும் தொழிலாள வர்க்க நலனுக்காகப் போரடிச் சுட்டுக் கொல்லப்பட்டு வீர மரணம் எய்திய மகத்தான தலைவர்கள்.

17. சார்ல்ஸ் இ. ருத்தன்-அமெரிக்காவில் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவியவர்; அதன் செயலாளராகவும் திகழ்ந்தார்.

18. 1900 நவம்பரில் ''கார்கோவில் மே தினங்கள்'' என்ற நூலுக்கு லெனின் எழுதிய முன்னுரையைப் பார்க்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org